Registered as a news paper in Ceylon




# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

ஒரு வருடத்துக்கு ரூபா 40-00

6 மாதத்துக்கு ரூபா 21-00

3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி என் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 20 ஆம நாள் துல்கஃதா 7 (2-4-63) செவ்வாய்க்கிழமை இதழ் 53


கொழும்பில்

# தமிழரசு எம். பி. க்கள் அவசரக் கூட்டம்!

## வட்டமேசை மகாநாடு பற்றி ஆலோசிக்கப்படும்?

### சத்தியாக்கிரகம் பற்றிய முக்கிய முடிவு இன்று வெளியாகும்

கொழும்பு, செவ்வாய்

**இன்று காலை பத்தரை மணிக்கு தமிழரசுக்கட்சி எம். பி.க்களின் அவசரக் கூட்டம் ஒன்று பாராளுமன்றக் கமிட்டி அறையில் நடைபெறவிருக்கிறது. இந்த அவசரக் கூட்டத்திற்கு சகல தமிழரசு எம். பி.க்களும் தவருது சமுகமளிக்கும்படி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கேட்டுக் கொண்டிருக்கிருர்.**

இக் கூட்டத்தில் தமிழ் மக்களை எதிர்நோக்கும் பல முக்கிய பிரச்னைகள் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச சத்தியாக்கிரகம் சம்பந்தமாக தீர்மானமான ஒரு முடிவு இப் பேச்சுவார்த்தைகளின்போது மேற்கொள்ளப்படும் என நம்பப்படுகிறது.

நேரடிநடவடிக்கைபற்றி முன்னுக்குப்பின் முரணை வகையில் பல்வேறு அபிப்பிராயங்கள் வெளியிடப்படுவதால் இப் பிரச்னையை தெளிவாக்கும் வகையில் கட்சி தனது முடிவை உறுதிப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நீதி மந்திரியும் மற்றும் சில சிங்கள எம். பி.க்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

**வட்டமேசை மகாநாடு?**

தமிழ் மக்களின் மொழி உரிமையையும்; மற்றைய உரிமைகளையும் பெறும் பொருட்டு வட்டமேசை மகாநாடொன்று கூட்டப்படவேண்டுமென்று சில அரசியல் கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதால், தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளுக்கும் தீர்வுகாணும் பொருட்டு வட்டமேசை மகாநாடொன்றைக் கூட்டுவது சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

**மட்டக்களப்பு கூட்டம்**

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற தீர்மானங்கள் கொழும்பில் இன்று நடைபெறும் அவசரக் கூட்டத்தில் ஆராயபபடும் எனவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், அங்கத்தவர்கள் சிலர் சத்தியாக்கிரகத்தைப் பின்போடவேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்களென்றும், உத்தேச சத்தியாக்கிரகம் சம்பந்தமான இறுதி முடிவு ன்றையக் கூட்டத்தில் வெளியாகலாம் என்றும் கூறப்படுகிறது.

**நேரடி நடவடிக்கை**

தனது நேரடி நடவடிக்கையை இம்மாதம் 17-ம் திகதி எடுக்கவிருந்த தமிழரசுக் கட்சி, தனது உத்தேச சத்தியாக்கிரகத்தை பின்போடலாம் என்றும் 'எல்லாம் தமிழியக்கம்' மட்டுமே ஆரம்பிக்கப்பட்டு அதைத் தீவிரமாக நடாத்துவதில் கட்சி முனையும் என்றும் நம்பப்படுகிறது. மேலும் தமிழரசுக் கட்சி தனது கோரிக்கைகளுள் தமிழ் உரிமையை மட்டும் முன்வைத்து போராட்டத்தை ஆரம்பிக்கும் என்றும் கூறப்படுகிறது.

## விசா கட்டுப்பாடு தளர்த்தப்படலாம்

### இலங்கை—இந்திய வர்த்தக உறவு விஸ்தரிக்க முயற்சி

கொழும்பு, திங்கள்

**இலங்கைக்கு வரும் இந்திய வர்த்தகர்கள் விஷயத்தில் விசா வழங்குவதில் இருக்கும் கட்டுப்பாடு தளர்த்தப் படவிருக்கிறது.**

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்தே இவ்விதம் கட்டுப்பாடு தளர்த்தப்படவிருக்கிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் இந்த வர்த்தகர்கள் வெளிநாட்டுச் செலாவணியில் சராசரி ரூ. 20 வைத்திருந்தாலே இவர்களுக்கு இவ்வித விசா சலுகைகள் அளிக்கப்படும்.

இந்திய-இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் இரு அரசாங்கங்களும் இரு நாடுகளிடையேயும் வர்த்தக உறவுகளை விஸ்தரிக்க ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

இந்திய ரிசேர்வ் வங்கி, இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் வர்த்தகர்களுக்குப் போதிய செலாவணியை அனுமதிப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய பார்லிமெண்டில் பிரதமர் நேரு விசா சம்பந்தமாகப் பேசியபோது வர்த்தகர்களுக்கு விசா வழங்குவது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளதாகவும், இருந்துவரும் விசா கட்டுப்பாடுகள் திருத்தப்படுவது பற்றி இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்யுமெனவும் தெரிவித்திருந்தார்.

## கோணேஸ்வரத்தில் பெருகிவரும் பக்தர்கள்கூட்டம்

### சாரணர், பொலிசார், ராணுவத்தின் உற்சாக சேவை

திருக்கோணமலை திங்கள்

எதிர் வரும் புதன்கிழமை கோணநாயகராலயப் பெருஞ் சாந்திக் குடமுழுக்கு வைபவத்தைமுன்னிட்டு இறுதி ஏற்பாடுகள் எல்லாம் எடுக்கப்பட்டுவருகின்றன. கோட்டை வாசலின் முன் தற்காலிக பொலிஸ்நிலையம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் ஏறக்குறைய நூறு சாரணர்கள் சடமையாற்றுகின்றனர், இன்று தொடக்கம் ஆலய மடத்தில் அன்னதானம் தினசரி நடைபெற ஆரம்பித்துள்ளது. ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் ஆலயத்திற்கு வருவதும் போவதுமாக இருக்கின்றனர். இப்பொழுதே பக்தர்கள் தொகை பெருகி வரும் வேகத்தைப் பார்த்து கும்பாபிஷேக தினத்தன்று ஜனநெருக்கடியை எப்படிக்கட்டுப்படுத்தலாமென்பதை ஆராய்ந்து முடிவிற்கு வருவதில் கும்பாபிஷேக புனருத்தாரணசபையினர் முயன்றுவருகின்றனர்கள். நெருக்கடிக்குள் முடிச்சுமாறிகள் தங்கள் கைவரிசையைக் காட்டலாமெனவும் ஆகவே பக்தர்கள் ஜாக்கிர

(8-ம் பக்கம் பார்க்க)

## திருக்கோணமலை மகா கும்பாபிஷேக அனுபந்தம்

திருக்கோணமலை கோவில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை 'ஈழநாடு' பத்திரிகையுடன் விசேஷ அனுபந்தம் படங்களுடன் வெளியாகிறது.

## பத்திரிகை செய்திக்கு என். கியூ. டயஸ் மறுப்பு

### "சமாஜத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை"

கொழும்பு, திங்கள்

உயர் பதவியிலிருக்கும் ஸிவில். ஸர்விஸ். உத்தியோகஸ்தர் ஒருவர் புத்த சமயத்தைச் சார்ந்த உத்தியோகஸதர்களைக் கூட்டி ஒரு இரகசிய மகாநாடு ஒன்றை நடத்தினர் என ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளிவந்த செய்தியைப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் மறுத்துள்ளார்.

இதுபற்றி திரு. என். கியூ. டயஸ் தெரிவித்துள்ளதாவது:-

"பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் குறிப்பிட்ட அந்த மகாநாட்டில் பௌத்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள், சில இலாகா தலைவர்கள், உதவி அதிகாரிகள, பொலிஸ், இராணுவ உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நான் இதுபற்றி நடத்திய விசாரணையில் குறிப்பிடப்பட்ட இந்தக் கூட்டம் பௌத்த சமாஜத்தின் மாதக் கூட்டம் என்றும் இந்தக் கூட்டம் புல்லர்ஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## செயற்கை இரத்தம்

### ஜப்பான் டாக்டர் சாதனை!

டோக்கியோ, ஏப். 1

டோக்கியோவைச் சேர்ந்த சத்திரசிகிச்சை வைத்தியர் கிமோட்டோ என்பவர், செயற்கை இரத்தம் தயாரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒஸாகாவில் நடைபெற்ற வைத்திய மகாநாடொன்றில் டாக்டர் கிமோட்டோ பேசுகையில், தாம் செயற்கை வழியில் இரத்தம் தயாரித்திருப்பதாகக் கூறினர்.

உலகத்தில் முதன் முதல் செயற்கை இரத்தம் தயாரிக்கப்பட்ட பெருமை இவரையே சாரும்.

## வரி விளம்பரம்

### தேவை

வளலாய் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு ஓர் மனேஜர் தேவைப்படுகிறது. காசப் பிணை 1000 ரூபாவும் ஆதனப் பிணை 3000 ரூபாவும் கொடுக்க வேண்டும். விண்ணப்பம் 8-4-63 வரையும் ஏற்கப்படும். க. தாமோதரம்பிள்ளை, ஷெ சங்கத் தலைவர், வளலாய், அச்சுவேலி.
1-4-63 838

### அறிவித்தல்

இளவாலை அர்ச். அன்னம்மாள் ஆலயத்தில் வழமை போல்,நிகழும் 4-4-63 வியாழக் கிழமை வியாகுலமாதா சுற்றுப் பிரகாரமும் அடுத்த நாள் வெள்ளி திருப்பாதை சுரூப எழுந்தேற்றும் இம்முறை சிறப்பாகக் கொண்டாடப்படும். இங்ஙனம்,இளவாலைக் கிறிஸ்தவர்கள். 839

### தேவை

சிற்றுண்டி வகைகளிலும், சமையல்களிலும் அனுபவம் வாய்ந்த திறமையான சமையற்காரர்களும் சப்ளையர்களும் உடனே தேவை. நேரில் சந்திக்கவும். ஸ்ரீ லெட்சுமி கபே, 302, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 383

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

கசியரும், டிலிவறி கிளார்க்கும் தேவை. கசியர் பிணைப் பணம் ரூ. 500. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். சிறீ லங்கா சலவைத் தொழிற்சாலை, K. K. S. ரோட், சுன்னுகம். 826

**ST. JOHN'S ACADEMY, Chundikuli, Jaffna.**
Wanted from May 1963 qualified teachers for G.C.E., Varsity Entrance and H.S.C. Classes - Arts & Science Subjects. Day & Evening Classes. Apply to the Director before 10th April.

## "கொடை வள்ளல்" மறைவுக்கு அனுதாபம்

ஊர்காவற்றுறை, திங்கள்
சுருவில் கிராமமுன்னேற்றச் சங்கக்கூட்டம் சமீபத்தில் ஆசிரியர் திரு. சி வைத்திலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

சுருவில் பகுதியில் ஒரு மகா வித்தியாலயம் அமைக்கும் முயற்சிக்கு இருபத்தைந்து பேரைக்கொண்ட ஒரு கல்விச் சபையும் தெரிவு செய்யப்பட்டது. இச்சபையினர் ஐந்து கிளைகளாகப் பிரிந்து செயலில் ஈடுபடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. இ. சிற்றம்பலத்தின் மரணம் குறித்தும் அனுதாபம் தெரிவித்தும் உரைகள் நிகழ்ந்தன. ஆசிரியர் திரு. தி. நடராசா அன்னரின் மரணம் குறித்துப் பேசுகையில், ஒரு குடிப்பிறந்த பஞ்சபாண்டவரில் மூத்தோன் இவரே என்றும் எங்கெங்கு பொதுக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், மடங்கள்,ஆலயங்கள் உண்டோ அங்கெல்லாம் பண உதவி செய்த ஒரு பெருவள்ளல் என்றும் அவரது மரணம் ஈடுசெய்ய முடியாத பெரு நஷ்டம் என்றும் குறிப்பிட்டார்.

"கொழும்பிலே பிரபல வர்த்தகரான ...யில் சொந்தக்காரரான அவர் தானதருமங்களில் சிறந்தவராகவும் சகல இன மக்களோடும் சேர்ந்து பழகும் பண்பினராகவும் தொழிலாளர் தோழனாகவும் நடுநிலைமை வாதியாகவும் திகழ்ந்தார்" என்றும் தொடர்ந்து அவர் கூறினார்.

அன்னாரின் மரணம் குறித்து திருவாளர்கள் சி. வைத்திலிங்கம், ச. கோபாலபிள்ளை, இ. இரத்தினகோபால், ஏ. டொமினிக், எஸ். பொன்னுச்சாமி என்போரும் அனுதாபம் தெரிவித்து உரை நிகழ்த்தினர். அனுதாபச் செய்தியின் பிரதி ஒன்றும் அன்னரது குடும்பத்தினருக்கு அனுப்பப்பட்டது.

# 'விஞ்ஞானத்தையும் இலக்கியத்தையும் இணைக்கவேண்டும்'

## 'ஈழகேசரி' பொன்னையா நினைவுவிழாவில் கருத்தரங்கம்

மாவிட்டபுரம், திங்கள்
"இலக்கியத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் பலமான போட்டி நடக்கும் இந்தக் காலத்தில் இரண்டுக்கும் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஒன்றினை ஒன்று புறக்கணிப்பின் அதனால் உலகிற்கு நஷ்டம் விளையும்" என்று இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கக் கருத்தரங்குக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. சி. ஸ்ரீநிவாசன் குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நேற்றுமாலை நடைபெற்ற ஈழகேசரிப் பொன்னையா நினைவுவிழாவில் இக் கருத்தரங்கம் நடைபெற்றது.

திரு. ஸ்ரீனிவாசன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

"விஞ்ஞானத்தைக் காப்பாற்றுவதோ அல்லது சிபார்சு செய்வதோ மிகக் கடினமானதல்ல. விஞ்ஞானம் பொருளாதாரத்துக்கு ஆதாரம். அதற்கு உதவி அவசியமில்லை. இலக்கியத்திற்கு இவை இல்லாவிடின் உலகில் அவை நிலைக்காது. கருத்தரங்குகளும், உரையாடல்களும் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாதன".

வித்துவான் பொ. முத்துக்குமாரன் பேசுகையில் கூறியதாவது:-

"முற்காலத்தில் செய்யுளே புலவர்கள், தம்கருத்தை நயம்பட உரைக்கும் கருவியாக இருந்தது. இந்நாளில் உரைநடையே எழுத்தாளர்களின் சிறப்பான கருவியாகும். ஆகவே எழுத்தாளர்கள் உரைநடையை அழகுபடக் கையாள வேண்டும். ஓர் இலக்கண வரம்புக்குட்பட தம் கருத்தை வெளிப்படுத்தவேண்டும். கடின உணர்ச்சிகளை நீக்குதலும், மக்களுக்கு விளங்கக்கூடிய சொற்களைக் கையாளுதலும் வேண்டும். சொல்லை அழகுற எடுத்தாளுவதோடு கருத்தைக் கவர்ச்சியான முறையில் சொல்லுதலும் விரும்பத்தக்கது. பிறமொழிச் சொற்களை தாராளமாகக் கையாளல் மொழிவளர்ச்சியைப் பாதிக்கும். தமிழ்ப் படைப்புக்கள் தமிழ்ப்பண்பாட்டை எடுத்துககாட்ட வேண்டுமேயன்றி பிறநாட்டு மக்களின் பண்புகளைப் பரப்பும் கருவியாயிருத்தல் கூடாது".

திரு. தரும சிவராமு பேசுகையில் கூறியதாவது:-

"சமூகத்திலிருந்து கலையும் சிந்தனைத்துறையும் இரு தனி வாய்க்கால்களாகப் பிரிகின்றன. விமர்சனம் இத்துறைகள் இரண்டினையும் இணைக்கின்றது.

கலை இன்றைய சமகால வாழ்க்கையைப் பற்றிய அவதானம் உள்ள எழுத்தாளனால் கிடைப்பது. அவன் சமூகத்தின் உணர்ச்சிக்குப் பிரதிநிதி. சிந்தனையாளன் சமூகத்தின் லட்சியங்கள், மரபு இரண்டையும் பற்றியதன் கருத்துக்களை வெளியிடுபவன் கலைஞனின் இன்றைய வாழ்வைக் காணும்போதும் இன்றைய வாழ்வு சமூகத்தின் மரபுக்கு உட்பட்டதா என்பதை அறிவுறுத்தவே இயங்குகிறான்".

திரு. செ. சண்முகநாதன் (சாண), நாடகம் என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

"நாடகத்தில் பல பிரதான அம்சங்கள் உள்ளன. பழமையைத் தழுவியே புதுமை ஏற்படவேண்டும். நாடகம் எழுதிவிட்டால், அதை நடித்துவிடலாம் எனக்கொள்ளமுடியாது மேடைக்கு ஏற்ற தகுந்த சில அம்சங்கள் உள. சமய, இலக்கிய நாடகங்கள் செந்தமிழில் அமையும் அதே வேளையில் சமூக நாடகங்கள் பொதுமக்களின் பேச்சுத்தமிழில் இருக்கவேண்டியது அவசியம். அப்பொழுதுதான் அதை மற்றவர்கள் நன்குக அனுபவிக்க முடியும்.

நாடகத்திலும் மற்ற எந்தத் தொழிலிலும் போல, பல கட்டுப்பாடுகளும், உத்திகளும், இலக்கணங்களும்உள என்பதை மறக்கக் கூடாது. நாடகத்தின் வெற்றி அந்த அம்சங்களைக் கவனிப்பதிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

நடிகன் மேடையில் அட்டகாசம் செய்யலாம். ஆனால், அதிலே ஓர் ஒழுங்கு இருக்க வேண்டியது அவசியம். அந்த ஒழுங்கு இருந்தால் தான் வேண்டிய மன உணர்வை நடிகர் ஏற்படுத்தலாம். நிகழ்ச்சியை சற்று மிகைப்படச் செய்தல் அவசியமாகலாம். ஆனால் சபையை உணரச் செய்ய அது அவசியமான அம்சமாக அமைகிறது. சினிமா உத்திகள் மேடைநாடகங்களுக்கு உகந்ததல்ல என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்."

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கக் காரியதரிசி திரு. தேவன் நன்றிகூறினர்.

## தியாகராசா மீண்டும் ஆணழகனுகத் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்
இலங்கை உயரப் பாய்ச்சல் வீரரான என் எதிர்வீரசிங்கம் தலைமையின் கீழ் நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆணழகன் போட்டி விபரம் வருமாறு:

**கனிஷ்டபிரிவு**

முதலாவதாக கே. ஞானபகதனும், இரண்டாவதாக ஏ. குலசிங்கமும், மூன்ருவதாக ரி. சற்குணராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

**சிரேஷ்டபிரிவு**

முதலாவதாக எம். ஏ தியாகராசாவும், இரண்டாவதாக எஸ். ஞானநாதனும், மூன்ருவதாக ஏ. திருமேனியும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மலேஷியா

கோலாலம்பூர், ஏப். 1
மலேஷியா சம்பந்தமாக எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை முன்னிட்டு மலாயாவின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என, அந்நாட்டு பாதுகாப்பு மந்திரி கூறினர். சில வருடங்களில் மலாயாவின் பாதுகாப்புச் செலவு இரட்டிப்பாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். புதிய விமானங்களும், ஆயுதங்களும் வாங்கப்படும் என்றும் ராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு நடைபெறுமென்றும் மந்திரி மேலும் தெரிவித்தார்.

அம்மா எனக்கு தினந்தோறும மாமைட் தருகிறதால் வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிருேம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிருேம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்து லபட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மைமாட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது திகஅப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

# குவாட்டமாலாவில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது!

## ஜனாதிபதி கைதானர்

## அரசியலமைப்பு சட்டம் ரத்து; பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது

லண்டன், ஏப்ரல் 1

குவாட்டமாலாவில் தற்போதைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அங்கு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. ஜனாதிபதி கைது செய்யப்பட்டார். முன்னாள் பாதுகாப்பு மந்திரியும் ராணுவப்புரட்சித் தலைவருமான கர்ணல் அசூடியா புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார் இவர் அனுபவமிக்க ஒரு ராணுவ அதிகாரியாகும். பார்லிமெண்ட் கலைக்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டமும் ரத்துச் செய்யப்பட்டது

ஜனாதிபதி மாளிகையில் மட்டுமே புரட்சிக்கு எதிர்ப்பு இருந்ததென்றும் ஆனால் மாளிகையின் முன்வாசல் டாங்கியைக் கொண்டு தகர்க்கப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.

54 வயதான புதிய ஜனாதிபதி, அதிபர் பதவியுடன், பாதுகாப்பு மந்திரி பதவியையும் வகித்து வருவார். அரசியலமைப்புச் சட்டத்தை விலக்கிவிட்டு, கட்டளை மூலமே தாம் ஆட்சி நடத்தப்போவதாயும், தற்காலிக அரசியல் சாஸனம் ஒன்றை வெளியிட போவதாயும் புதிய அதிபர் கூறினர்.

முன்னாள் ஆட்சியினர் கம்யூனிஸ்டுகள் மீது பொறுமை காட்டியதாயும் குற்றஞ்சாட்டப்பட்டது. கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதிக்கு முந்திய ஜனாதிபதி அரசியல் அஞ்ஞாதவாசத்திலிருந்து நாடு திரும்புவதாய் வெளியான செய்தியைத் தொடர்ந்து புதிய புரட்சி நடைபெற்றது.

### 'எல்லையைக்காக்க உற்பத்திபெருக்கம்'' —நேரு

புதுடில்லி, மார்ச் 31

'நாட்டை வலுப்படுத்த, வேறு நாட்டவர்கள் நமது எல்லையைக் கடந்து வராமல் தடுப்பதற்கு, உற்பத்தியை நாம் பெருக்க வேண்டும். நாடு செழிப்படையச் செய்வதற்கு வேறு நாட்டவர்கள் நமது எல்லையை மீறி வராமல் தடுக்கவேண்டும்' என்று டில்லியில் இன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பாரதப் பிரதமர் திரு. நேரு பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சீனரின் தாக்குதல்களினால் எமது பொறுப்புக்கள் அதிகரித்து விட்டதென்றும், நாம் எப்பொழுதும் மற்றைய நாட்டவர்களின் உதவியை எதிர்பார்க்கக் கூடாதென்றும் கூறினர்,

அவர் மேலும் கூறியதாவது: "எமக்கு பலநாடுகள் உதவியளித்து வருகின்றன. ஆனால் அவர்களின் உதவியால் எமது முழுப்பொறுப்புக்களும் பூர்த்தியாகிவிடும் என்று எண்ணிவிடக்கூடாது. மிகுதிப் பொறுப்பு எம்மிடம் தான் இருக்கிறது.

ஜாதி, சமய வேறுபாடுகளின்றி எல்லோருக்கும் சமமான வாழ்க்கை அளிப்பதே எமது சோஷலிஸத்தின் நோக்கமாகும். சமூக முன்னேற்றத்துக்கு கல்வியவசியம் ஆனால் கல்வியுடன் மட்டும் நாம் நின்றுவிடக் கூடாது. தொழிலும் செய்யவேண்டும். உற்பத்தி பெருகவேண்டும். நம்மிடையே பல்வேறு சமூகத்தினர் உண்டு. சமூகங்கள் யாவும் ஒன்றுபட்டு செயல்படவேண்டும். இதனால் நாடும் பலம் பெறும்."

### அராபிய சம்மேளனம் மீண்டும் முட்டுக்கட்டை

கெய்ரோ, ஏப்ரல் 1

ஐக்கிய அராபியக் குடியரசு ஸிரியா, ஈராக் ஆகிய நாடுகளின் இணைப்பு சம்பந்தமான பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாயும், ஸிரியாவிலுள்ள பாத் கட்சிமீது எகிப்து சந்தேகம் கொண்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### வேவு தலைவர் ராஜினமா

டெல்அவில், ஏப்ரல் 1

இஸ்ரேல் வேவு சபைத் தலைவர், பிரதமர் பென்குரியனுடன் அபிப்பிராயபேதம் காரணமாக ராஜினமாச் செய்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### தகராறு தீரினும் பலம் பெருகும்

கோயம்புத்தூர், ஏப்ரல் 1

சீனவுடனுள்ள தகராறு அமைதியாகத் தீர்ந்தாலும், இந்தியாவின் பலத்தைப் பெருக்கியே ஆகவேண்டுமென ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பெரியநாயர் பாளையத்தில் சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் அவர் பேசினர்.

இளைஞர்கள் உடல்வலுவைப் பெருக்கவேண்டுமென்றும், 3-ம் ஐந்தாண்டு திட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விளையாட்டுத்துறைக்கு 29 விருதுகள் ஒதுக்கப்பட்டிருந்தும் கூட, 9 பேர் மட்டுமே அவைகளுக்குத் தகுதிபெற்றதிலிருந்து இளைஞர்களின் அக்கறையின்மை ஏற்படுவதாயும், இதை நீக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

கடவுளைப் பற்றிப் பேசி அதே சமயம் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சேவை செய்யாதவர்களை அவர் கண்டித்தார் பண்பாட்டின் பழைய கருத்துக்களை புதிய நிலைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### டாக்டர் ஹுஸெய்ன்

கார்ட்டூன், ஏப்ரல் 1

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் சூடான் அதிபரை நேற்றைய சந்தித்துப் பேசினர். ...ந்தார்.

### ரொடீஷிய பிரதமர் ராஜினமா செய்வார்?

ஸாலிஸ்பரி, ஏப்ரல் 1

ரொடீஷிய சம்மேளனத்தைப் பாதுகாக்கும் தமது இறுதி முயற்சி தோல்வியடைந்த பிரிட்டிஷ் பிரதமர் சர்ராய் வெலன்ஸ்கி தெரிவித்தார். சம்மேளனத்திலிருந்து நியூசிலாந்துபிரிந்து சென்றதைபோல், வடரொடீஷியாவும் பிரிந்துசெல்ல உரிமையளித்த பிரிட்டனின் செயல் நம்பிக்கைத் துரோகமானது என்றும் அவர் கூறினர். புதிய நிலைமையின் காரணமாக சர்ராய் ராஜினமாச் செய்யலாம் என்றும், அவரது அரசியல் எதிர்காலம் இருள் சூழ்ந்திருப்பதாயும் கூறப்படுகிறது.

### வானிலையால் பாதிக்கப்பட்ட மந்திரி

ஸ்ரீநகர், ஏப்ரல் 1

நேற்று காஷ்மீரிலிருந்து டில்லி புறப்பட்ட இந்திய உள்நாட்டு மந்திரி திரு. மொரார்ஜி தேசாயை ஏற்றி வந்த விமானம், வானிலைக் கோளாறு காரணமாய் மீண்டும் ஸ்ரீநகருக்கே திரும்பியது.



பளிங்குக் கல்லில் சித்தரிக்கப்பட்ட திருமதி கென்னடியின் உருவப்படத்தை அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்கு இந்தியாவைச் சேர்ந்த ஆசாண்புஷன் டானி அன்பளிப்புச் செய்கிருர்.

### கரிபியனில் யு. எஸ். நடவடிக்கை

வாஷிங்டன், ஏப்ரல் 1

கியூபா மீது தாக்குதல்—எதிர்த்தாக்குதல் நடைபெறுவதைத் தவிர்க்கும்பொருட்டு அமெரிக்கா கரிபியன் கடலில் தரை, கடல் விமானப்படைகளை பலப்படுத்தியிருக்கிறது. காஸ்ட்ரோ எதிர்ப்பாளர், பகாமா தீவை தங்கள் நடவடிக்கைத்தளமாகஉபயோகிக்காமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளும்படியும் அமெரிக்கா பிரிட்டனைக்கேட்டிருக்கிறது.

## அந்தமான், நிக்கோபார் தீவுகளில் குடியேற்றம்

### தமிழ் நாட்டிலிருந்து செல்வோர் குறைவு

சென்னை, ஏப்ரல் 1

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இந்திய மக்களைக் குடியேற்ற வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தின் திட்டத்திற்கேற்ப, சென்னை மாநிலத்திலிருந்து அத்தீவுகளுக்கு விவசாயிகளோ, தொழிலாளிகளோ செல்வதாக இல்லை.

பலவித உதவிகளையும் சலுகைகளையும் அளிக்க மத்திய அரசாங்கம் முன்வந்துள்ள போதிலும் கூட கடந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து யாரும் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் குடியேறவில்லை.

அந்தமான்-நிக்கோபார் செல்வோருக்கு 5 ஏகரா நன்செய்நிலமும், வீடுகட்டவும் பயிர் செய்யவும் இன்னொரு 5 ஏகரா நிலமும், அத்துடன் ரூ. 1730 கடனும் போக்குவரத்துச் செலவுக்கு ரூ 210-ம் உதவித் தொகையாக ரூ.810-ம் தருவதாக மத்திய அரசாங்கம் அறிவித்தது.

1961-ம் ஆண்டுவரை உள்ள 5 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலிருந்து அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 136 குடும்பங்கள் குடியேற வழி செய்யப்பட்டதில் 42 குடும்பங்கள் மட்டுமே அங்கு குடியேறின.

### ஆசிரியர்களுக்கு ராணுவப் பயிற்சி

புதுடில்லி, ஏப். 1

3500 இந்தியக் கல்லூரி ஆசிரியர்கள் தேசிய கடற்படைப் பயிற்சி பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டது. ஆசி...

ரியைகளுக்கு இதுசம்பந்தமாக ஜுவாலியரில் தனிக்கல்லூரி அமைக்கப்படும்.

### இந்திய உற்பத்தி பெருக்கம்

பங்களூர், ஏப். 1

பங்களூர் டெலிபோன் தொழிற்சாலை சென்ற வருடம் ரூ. 770 லட்சம் பெறுமதியான டெலிபோன் கருவிகளை விற்பனைக்குக் கொண்டுவந்தது. அங்குள்ள 9000 தொழிலாளர்களுக்கு ரூ. 10 லட்சம் போனஸ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஹிந்துஸ்தான் இயந்திர உற்பத்தி தொழிற்சாலை ரூ. 607 லட்சம் பெறுமான 1615 இயந்திரங்களை உற்பத்தி செய்தது. பிலாய் உருக்காலை குறியளவுக்கு 3 மாதங்களுக்கு முன்பே 10 லட்சம் டன் உருக்கு உற்பத்தியைப் பூர்த்தி செய்தது.

### செக். விமானம் சோதனை

லண்டன், ஏப்ரல் 1

பிராக்கிலிருந்து கியூபாவுக்குச் சென்ற செக்கோஸ்லோவேக்கிய விமானம் ஒன்று ஸ்கொட்லாந்தில் இறங்கியதைத் தொடர்ந்து அதில் ஆயுதங்கள் இருக்கின்றனவா என பிரிட்டிஷ் பொலிசார் சோதனையிட்டனர். வெளிநாட்டிலாகாவின் உத்தரவுக்கிணங்க இச் சோதனை நடைபெற்றது.

### வெள்ளை அரிசிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வத்தளை, திங்கள்

ஹெந்தாலை ஐக்கிய பண்டக சாலையில் கொடுக்கப்பட்ட வெள்ளை அரிசி மக்கள் உண்ணுவதற்கு உகந்ததாகக் காணப்படாததால் இந்த அரிசி விநியோகத்தை ஆட்சேபித்து ஆண், பெண், சிறுவர்கள் உட்பட ஆயிரத்துக்கு அதிகமானோர் மெத்தகொடையிலிருந்து ஹெந்தாலை ஐக்கிய பண்டக சாலைக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்கள்.

மெத்தகொடை நகரசபை அங்கத்தவர் திரு. ஹென்றி பரணவிதானை தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆட்சேப சுலோகங்கள் எழுதப்பட்ட மட்டைகளையும், பானைகளில் விநியோகிக்கப்பட்ட அரிசியைக் கொண்டு சமைக்கப்பட்ட சோற்றையும் கொண்டு சென்றனர்.

ஐக்கிய பண்டகசாலைக்கு முந்நூற்றுக் கணக்கான படி அரிசி கொட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆட்சேபக் கூட்டத்தில் பேசிய திரு. பரண விதானை உணவுக் கமிஷனரின் நடவடிக்கையைக் கண்டித்ததோடு நல்ல அரிசியை படிக்கு ஐம்பது சதம் கொடுத்தும் பெற மக்கள தயார் எனவும் கூறினர்.

### திஸநாயகா ஐ. ஜி. ... பதவியை ஏற்ருர்

கொழும்பு, திங்கள்

திரு. எஸ். ஏ. திஸநாயகா இன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியை ஏற்ருர்.

இவர் முன்னர் புலன் விசாரணைப்பகுதியின் உதவி ஐ. ஜி. பி. ஆக கடமையாற்றி வந்துள்ளார்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உதவிக்காரியதரிசி திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தனவும் இன்று உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிர்வாகப்பகுதி பதவியை ஏற்ருர்.

### சென்ற மாதத்தில் 50 கொலைகள்

கொழும்பு, திங்கள்

சென்ற மாதத்தில் இலங்கையில் 50 கொலைகள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது:

சென்ற மாதத்தில் இடம் பெற்ற கொலைகளின் எண்ணிக்கையுடன் இந்த வருடத்தில் இதுவரை இங்கு 151 கொலைகள் நிகழ்ந்துள்ளன.

விபத்துக்கள் காரணமாக 22 பேர் சென்ற மாதத்தில் மரணமானர்கள். இந்த வருடத்தில் கடந்த மூன்று மாதங்களிலும் 94 பேர் விபத்துக்களினல் மரணமானர்கள்.

### இந்தியவிமான படைக்கு 30 வயது

புதுடில்லி, ஏப்ரல் 1

இன்று இந்திய விமானப் படைக்கு 30 ஆண்டுகள் ஆகின்றன. விமானப்படைத் தலைவர் ஏர் மார்ஷல் முகர்ஜீ இது சம்பந்தமாகப் பேசுகையில், எல்லை அபாயம் இன்னும் குறையவில்லை என்ருர். விமானப் படையில் சேர தங்கள் புதல்வர்களுக்கு ஊக்கமளித்த பெற்ரேர்களுக்கு அவர் பாராட்டுத தெரிவித்தார்.

### டேவிஸ் கப்

பூனு, ஏப்ரல் 1

கிழக்கு பிராந்திய டேவிஸ் கோப்பைக்கான டென்னிஸ் போட்டி நேற்று இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றபோது இரு ஒற்றையர் ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றது.

### மணி வாக்கு

ராமனும் ராமநாமமும் இந்துக்களுக்கு மட்டுமே என்றும், அதை மற்றச் சமயத்தார் சொல்லக் கூடாதென்றும் சிலர் ஆட்சேபிப்பதைப் பார்க்கையில் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இந்துக்களுக்கு ஒரு தெய்வமும், வேறு சமயத்தவர்களுக்கு வெவ்வேறு கடவுள்களும் தனித்தனியேஉள்ளனரா?

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 20 உ (2-4-63)


## திரு. எஸ். ஜே. வி. அறிக்கை

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியிட்டுள்ள ஒரு புதிய அறிக்கையில் தமிழ்ப் பேசும் மக்களின் சில சங்கடங்களை எடுத்துக் கூறி, அரசாங்கமும் சிங்களத் தலைவர்களும் அவற்றைத் தீர்க்கத் தவறிவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றார். தமிழ்ப் பேசும்மக்கள் அனைவருமே, நமக்கு மிகப் பெரிய குறைகளும் சங்கடங்களும் உள்ளனவென்பதையும் அரசாங்கமும் சிங்களத் தலைவர்களும், தமிழ் மக்களுக்கு நீதி வழங்கத் தவறிவிட்டனரென்பதையும் ஒப்புக் கொள்ளுவரென்றே நம்புகின்றோம்.

இன்றைய நிலையிலே தமிழ்ப் பேசும் மக்களுக்கு மூன்றுவித மாற்றுவழிகள் இருப்பதாக திரு. எஸ். ஜே. வி. கூறுகின்றார். ஒன்று பலாத்காரவழி. அது அனுப்வசாத்தியமற்றதென்றும், நெறியற்றதென்றும் அவரே தள்ளிவிட்டார். மற்றொன்று மகாத்மாகாந்தி காட்டிய வழியான சத்தியாக்கிரகம். இதை அவர் ஆதரிக்கின்றார். மூன்ருவது நமது உரிமைகளைக் கைவிட்டுச் சரணாகதியடைவது. இந்த மானக்கேடான வழியை நிராகரிக்க வேண்டுமென்று சமஷ்டிக்கட்சித்தலைவர் கூறியுள்ள யோசனையை தமிழ் மக்கள் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்

இம்மூன்று வழிகளைத் தவிர வேறு தகுந்த மாறுவழிகள் கூறப்படுமாயின், அவற்றைத் நாம் கவனித்து ஆலோசிப்பதாக திரு. செல்வநாயகம் அதே அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்த விவேகமான யோசனை குறிப்பிடத்தக்கது. சமஷ்டிக்கட்சியின் உத்தேச நடவடிக்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு இதனுல் பெரியதோர் பொறுப்பு சுமந்துள்ளது. தமிழரின் ஒற்றுமைக்கும், சுயமரியாதைக்கும், இலங்கையின் நன்மைக்கும் மாறில்லாத ஆக்கபூர்வமான மாற்று யோசனைகளையும், கருத்துக்களையும் கூற அவர்கள் முன்வர வேண்டியவர்களாகவுள்ளனர். அவ்வித ஒரு முக்கிய யோசனையை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், யாழ்ப்பாணக்கூட்டத்தில் கூறியதை நேற்று இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். இந்த முக்கிய யோசனையைப்பற்றி திரு. எஸ். ஜே. வி. கூறியபடி தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்ய முன்வருமென்றே நம்புகின்றோம்.

தமிழ்ப்பேசும் மக்களின் இவ்விரு முக்கிய தலைவர்களும் இனி நேரில் கூடிப் பேசவேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுவிட்டது. இவ்விரு தலைவர்களும் பிரிந்திருப்பதால், தமிழ்ச் சமூகம் பிளவுபட்டு, ஒற்றுமையின்றி பலவீனமடைந்துள்ளது. சோதனைகளும் நெருக்கடியும் அதிகரித்துள்ள இச்சமயத்திலே சமூகத்தின் மேலான நன்மையையே கருதும் இவ்விரு தலைவர்களும் தங்களது பழைய வேற்றுமைகளை எல்லாம் மறந்து, பொது இலட்சியமான சமூக நன்மைக்கான முறையில் ஒற்றுமையான திட்டம் வகுக்க முன்வர வேண்டிய சமயம் வந்துவிட்டது. இரு தலைவர்களும் இப்போது கூடிப் பேசுவதாயின், இங்கு தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருக்கும் புதிய உற்சாகமும் பலமும், நம்பிக்கையும் ஏற்படும். அரசாங்கமும சிங்களத் தலைவர்களும், இந்தப் புதிய ஒற்றுமையான கோரிக்கையை அலட்சியம் செய்ய முடியாது. இரு தமிழ்த் தலைவர்களும் இச்சமயம் ஒற்றுமையாகக் காரியம் செய்வதாயின் சமூகத்தின் விமோசனத்துக்கான நாள் மிகவும் நெருங்கிவிடுமென்பது திண்ணம்.

# 'மலேசியா' நெருக்கடியில் ஏற்பட்டுவரும் தளர்வு

## சீனப் பேராசைக்கு புதிய கூட்டரசு மண்போடும்

மலாயா, சிங்கப்பூர் புருனை, சாராவாக், வடக்கு போர்னியோ, ஆகிய பகுதிகளை ஒன்ருக இணைத்து "மலேசியா" என்ற நாட்டை உருவாக்குவதற்கு இந்தோனேஷியா தெரிவித்த கடும் எதிர்ப்பு காரணமாக ஏற்பட்ட நெருக்கடி ஓரளவு தணிந்துள்ளது. இவ்வாறு நெருக்கடி தணிந்ததுபற்றி ஆஸ்திரேலியாவின் தூதராக, அரசியல் வட்டாரத்தினர் பெருமிதம் கொண்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் தலைநகரான மனிலாவில் ஆசியா மற்றும் தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதார கமிஷனின் கூட்டம் நடந்தபோது ஆஸ்திரேலிய வெளிவிவகார மந்திரி சர் கார்வீல்டு பார்விக் அதிகாரப்பற்றற்ற முறையில் நடத்திய பேச்சுவார்த்தைகளே இதற்கு காரணம், என்றும் 'மலாசியா' பிரச்னைபற்றி தகராறுகொண்டுள்ள மலாயா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய 3 நாடுகளும் கொண்ட மகாநாடு நடைபெறுவதற்கான சூழ்நிலையை இவர் ஏற்படுத்தியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்த பிரச்னையின் நெருக்கடி இப்போது ஓரளவு தணிந்துள்ளதற்கு ஆஸ்திரேலிய மந்திரியின் முயற்சி காரணமாக அல்லது இந்தோனேஷியா தனது கெடுபிடிப்போக்கை தளர்த்தியுள்ளது காரணமா என்பது இனிமேல் முடிவு செய்யப்படவேண்டிய விஷயமாகும்.

எனினும் இந்தோனேஷியா, மலாயா, பிலிப்பைன்ஸ் ஆகிய 3 நாடுகளுமே தங்களிடையே உள்ள தகராறைத் தீர்த்துக் கொள்ள பொதுவாக விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது, இதுவே மனிலா பேச்சுவார்த்தைகளின் பலனுகும். ஆயினும் இதை எப்படித் தீர்த்துகொள்வது என்பதில் தான் சங்கடம் உள்ளது.

இத்தகராறுபற்றி 3 நாடுகளின் அதிகாரிகளும் இன்னும் சிலநாட்களில் பேச்சுவார்த்தை நடத்தக்கூடும் என்று மணிலாவிலிருந்து திரும்பிய இந்தோனேஷிய மந்திரி தெரிவித்துள்ளார். இந்த 3 நாடுகளின் தலைவர்களான சுகர்னே, மகபகால். துங்கு அப்துல் ரஹ்மான் ஆகிய மூவரைக் கொண்ட உச்சகட்ட மகாநாட்டுக்கு வழிவகுக்கும் வகையில் அதிகாரிகளின் பேச்சுவார்த்தை நடக்கும். இந்த உச்சகட்ட மகாநாட்டை அடுத்த மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இநத பேச்சுவார்த்தைகள் நடைபெற இந்தோனேஷியாவும், மலாயாவும் நிபந்தனைகளை விதித்துள்ளன.

மலேசியா பிரச்னையானது ஆஸ்திரேலியாவுக்கு புதிய அனுபவத்தை ஏற்படுத்திய தோடு இதிலிருந்து சில படிப்பினைகளையும் ஆஸ்திரேலியா கற்றுக்கொண்டுள்ளது. பிரத்தியட்ச நிலைமைக்கு பொருத்தமற்ற முறையில் ஆஸ்திரேலியா பின்பற்றிவந்த வெளிநாட்டுக் கொள்கையையும், ராணுவக் கொள்கையையும் மலேசியா பிரச்னை வெளிப்படுத்திக் காட்டியது. கொரியா யுத்தத்துக்குப்பிறகு ஆஸ்திரேலியாவுக்கு போர் அபாயத்தை ஏற்படுதியது மலேசியப் பிரச்னையேயாகும். ஏனெனில் மலாயா தாக்கப்பட்டால் ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி மலாயாவின் உதவிக்கு ஆஸ்திரேலியா வந்தாகவேண்டும், ஆனல் ஆஸ்திரேலியாவோ இந்த பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையில் நடந்துகொண்டது. இவ்வாறு ஆஸ்திரேலியா பின்வாங்கியதற்கு அது, தன்னைவிட ராணுவ ரீரயில் பலம் வாய்ந்த, ஆனல் அரசியல் ரீதியில் பக்குவம்பெருத இந்தோனேஷியாவை விரோதித்துக் கொள்ள பயந்ததே காரணம்.

மலேசியா பிரச்னையைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டு, ராணுவ கொள்கைகள் பரிசீலனைக்குள்ளாகியிருக்கின்றன. ஏற்கனவே ராணுவத்துக்கான செலவு அதிகரிககப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே ஆஸ்திரேயாவுக்குள்ள செல்வாக்கில் மலேசியா பிரச்னை காரணமாக திருப்புமுனை ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. சர்வதேச விவகாரத்தில் இதுவரை ஆஸ்திரேலியா பின்பற்றிவந்த தெளிவற்ற போக்குமாறி உருப்படியான கொள்கை தோன்றக் கூடும் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இந்தோனேஷியாவின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, மலேயாசிய அமைப்பை இந்தியா ஆதரிக்கும். இதற்குப்பல காரணங்கள் உள்ளன. இப்பகுதிகளின் மீது சீன கொண்டிருக்கும் ஏகாதிபத்திய ஆசையால், மலேயாசிய அமைப்பு மண்ணைப்போடும் என்று இந்தியா கருதுவது முதற் காரணமாகும்.

மலேசியா இராணுவம் மிகப் பலம்வாய்ந்ததாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. முப்படைகளான இராணுவம் விமானம் கடற் கடற்படை ஆகியன போதிய பலம் வாய்ந்தவையாக இருக்கும். இவற்றுக்கான தளவாடங்களில் பெரும்பாலானவற்றை பிரிட்டன் அளிக்கும்.

அமையப்போகும் புதுக்கூட்டாட்சியில் சேரவிருக்கும் தீவுகளில் வாழும் மக்கள், தங்களுடைய ஆதரவைப் புது ஆட்சிக்கு அளித்துள்ளனர் என்பதில் துளியும் ஐயமில்லை.

ஆனல் புதிய கூட்டாட்சி, தன்னுடைய அண்டை நாடுகளைவிட பொருளாதார வளத்துக்கான எல்லா வழிவகைகளும் கொண்டதாக இருக்கும் இதுதான் மலேயாசியாவின் அண்டை நாடுகளின் கண்களை உறுத்துகின்றது.

மலேயாசியாவின் கம்யூனச எதிர்ப்புக்கொள்கை உலகிலுள்ள நடுநிலை நாடுகளின் மத்தியில்சந்தேகச் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. யுகோஸ்லேவியாபோன்ற நாடுகள்-நடுநிலைநாடுகள்கூட மலேயாசிய அமைப்பில் ஐயப்பாடு கொண்டுள்ளன.

மலேயாவில் இருப்பது போன்ற ஏகாதிபத்தியப்பிடி, அமையவிருக்கும் மலேயாசிய அமைப்பிலும் இருக்கும் என்ற ஏகாதிபத்தியப் போர்ப்பரணி ஒருபுறம் கேட்கத்தான் செய்கிறது.

ஐ. நா. சபையின் காலணி ஆதிகக ஒழிப்புக்குழுவின்முன் மேற்படி பிரச்னை கொண்டு போகப்படுமானல், தன்நிலையை விளக்கிக்கூறி, ஏனைய நாடுகளை ஒத்துக்கொள்ளச்செய்ய, மலேயா சற்று சிரமப்படும் அளவுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புக்குரல் எழுப்பப்பட்டுள்ளது.

மலேயாசிய அமைப்பை எதிர்த்துப் புதுடில்லி உட்பட, பல ஆசிய நாடுகளில், தனது கடும் வெறுப்பை இந்தோனேஷியா கொட்டிக் கொண்டுள்ளது.

எனவே ஐ. நா. விலுள்ள நடுநிலைநாடுகளின் மூலம், இந்தியா மலேயாசியா அமைப்பை எதிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனல் புதுடில்லி மலேயாவை ஆதரிப்பதில் தன் கொள்கையை கைவிடப்போவதில்லை. ஆனல் இந்தோனேஷியாவுக்கும், மலேயாவுக்கும் இடையிலான தகராறில் இந்தியா சிக்கிக்கொள்ளாமலிருக்கவே விரும்புகிறது.

ஏனெனில் இரு நாடுகளுடனும் இந்தியா நல்லுறவு கொண்டு வாழவேண்டுவதன் இன்றியமையாமையை அண்மையில் நடைபெற்ற சீனப் படையெடுப்பு இந்தியாவுக்கு வலியுறுத்திவிட்டது. ஏனெனில் இந்நாடுகள் சீனவின் அரசியல் சூழ்ச்சிக்கும், பிரசார பீரங்கிக்கும் ஆட்பட்டுவிடக்கூடாட.

மலேயாசிய அமைப்புக்குச் சில வாரங்களுக்கு முன்னர் கோலாலம்பூரில் ஒருதுணை ஹைகமிஷனரை நியமிக்க இந்தியாக முடிவுசெய்துள்ளது.

## இலங்கையில் பணவீக்கம்?

கொழும்பு, திங்கள்

இலங்கையில் பணவீக்கத்திற்கான அறிகுறிகள் ஏற்கனவே தெளிவாகத் தென்பட ஆரம்பித்துவிட்டதாகவும், இதைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகிவிட்டது என்றும், மத்திய வங்கி வெளியிட்டுள்ள 1962-ம் ஆண்டுக்கான அறிக்கையில் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

## ஐயாறன் எழுதுவது

இன்று ஸ்ரீ ராம நவமி. ஸ்ரீ ராமர் அவதரித்ததிருநாள். இத்திருநாளை வைணவர்கள் மட்டுமன்றி, சைவர்களும் அதிகமாகக் கொண்டாடுவதைக் காணலாம். கொழும்பிலே விபூதி பூசும் சைவர்களே அதிகமாக அடங்கிய ஸ்ரீராமகான சபையினர், இத்திருநாளை சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமை விஷேசமாகக் கொண்டாடினர். இதிலிருந்து ஸ்ரீராமர்சைவமக்களுக்கும்உரிய தெய்வமென்று ஏற்படுகிறது.

ஸ்ரீ தியாகராஜ சுவாமி, சுவாமி ராமதாஸ், மகாத்மா காந்தி முதலிய பெரியோர்கள் சைவமரபிலே பிறந்தவரெனினும் ஸ்ரீராமனையே வழிபடும் தெய்வமாகக்கொண்டு, ராம பக்தியில் திகழ்ந்து வாழ்ந்தவர்கள். இது எப்படி?

இதன் ரகசியத்தைஸ்ரீதியாகராஜர் ஒரு கீர்த்தனையில் தெரிவித்துள்ளது பலருக்கும் தெரியும். சிவ மந்திரமாகிய, 'நமசிவாய' என்பதில், 'ம' என்ற ஜீவனையும், மாதவ மந்திரமாகிய, 'நமோ நாராயணய' என்பதில் 'ரா' என்ற ஜீவனையும் சேர்த்து, 'ராம' என்று அத்தெய்வத்துக்குப் பெயர் வைத்ததாயும், ஆகவே சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் அவர் சமரச தெய்வமென்றும் தெளிவாக்கினர்.

"என் சமயமே பெரிது. உன் சமயம் சிறிது" என்று நம்மிடையே நாம் மதத்தின் பெயரால் சண்டைபோட்டுக் கொண்டு, பிளவுபட்டு, பல பல உயிர்ச்சேதங்களும்கூட ஏற்படுவதைப் பார்க்கிறோம். அக்காலத்திலே இந்துசமயம் மட்டும் இருக்கையில் சைவ—வைணவச் சண்டைகள் நடந்து வந்துள்ளன. இந்து மதத்தில் மட்டுமல்ல, மற்ற பல சமயங்களிலும்கூட இப்படித்தான் என்பதற்குச் சரித்திரம் சான்றுபகரும். உயிருடன் கொளுத்தும் பல"பாணந்துறைகள்" பல நாடுகளிலும் நடந்துள்ளன. இதையெல்லாம் காணும்போது, நாஸ்திகம் பரவுவதில் வியப்புண்டா? ஆனல் கம்யூனிஸத்திலும்கூட இன்று வேதாந்த-சித்தாந்தச் சண்டை வந்துவிட்டதைப் பார்க்கின்றோம்!

பல மதங்களையும் சேர்ந்த நாம், ஒரே தெய்வத்தின் பெயரால், சமரசமாக, உயர்வு தாழ்வின்றி வாழமுடியாதா?

* * *

கொழும்பு ஸ்ரீ ராமகானசபையார் வெளியிட்டுள்ள நிர்வாக அறிக்கையில், ஒவ்வொரு சனிக்கிழமையும் பஜனைகள் நடந்துவருவதாயும் ஓர் அன்பர் பஜனைப்புத்தகத்தை அச்சடித்து உதவியதாயும் நன்றியுடன் குறிப்பிட்டுள்ளனர். ஆனல் பஜனைக்கு அதிக மக்கள் வருவதில்லையாம்!

பஜனைக்கு ஏன் மக்கள் வருவதில்லை? சுண்டல் பிரசாதமிருந்தும் கூட்டம்வராத காரணமென்ன? இதை ஆராய்ந்து மக்களைக் கவரத்தக்க முறையில் பஜனைகளை நடத்த ஒழுங்குசெய்யவேண்டும். பயன் இருப்பதாகக் கண்டால் மக்கள் அதிகமாகக் கூடுவர்.

மகாத்மாகாந்தி, பல சமய சமரச கூட்டுப்பிரார்த்தனையை, நடத்தி வழிகாட்டினர். கூட்டுப்பிரார்த்தனை பஜனை இவற்றை நாம் அலட்சியம் செய்யப்படுமா? தெய்வமென்ற குறையாத மகாசக்தியிடமிருந்து, நாம் பிரார்த்தனைமூலம் பெருநன்மைகளைப் பெறலாமென்ற நம்பிக்கையை மட்டும் மக்களுக்கு ஊட்டிவிட்டால், அதை அவர்கள் விடுவார்களா?

* * *

திருக்கோணமலையிலே நாளை புதன்கிழமை காலை 8-55 முதல் 10-34 க்குள் மகாகும்பாபிஷேகம். இதைப்பற்றி ஒரு பெரியாரைக் கேட்டேன். இத

(5-ம் பககம் பார்க்க)

ஜி. ஜி. யின்

# வட்ட மேசை யோசனைக்கு எம். பி.க்கள் ஆதரவு

கொழும்பு, திங்கள்

தமிழரின் மொழிப் பிரச்னைக்கும் தமிழர்களைப் பாதிக்கும் இதர பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதற்காக ஒரு வட்ட மேசை மகாநாடு நடத்தப்பட வேண்டுமென திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தெரிவித்திருந்த கருத்துக்கு அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வத்தேகம எம். பி. திரு. ஏ. ரத்னயகா:— யு. என். பி. கட்சி இவ்வித யோசனையை வரவேற்பதாக குறிப்பிட்டுத் தெரிவித்துள்ளதாவது:—

இரு சமூகங்களிடையே இருந்துவரும் தகராறுகளை அரசியல் சார்பின்றி பரிசீலனை செய்யவேண்டும். சமூக ரீதியிலும் மத ரீதியிலும் பிரிவுபட்டுக்கொண்டிருப்பதற்கு இலங்கை மிகச் சிறிய நாடென்பதை நாம் உணரவேண்டும்.

### பிரதான கட்சிகள் கூடவேண்டும்

பிரதான கட்சிகள் ஒன்று கூடி இதுசம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னைகளுக்கு நல்ல தீர்வுகாண முயற்சி செய்ய வேண்டும்.

நாட்டின் ஐக்கியம் தான் மிக முக்கியம்.

காலி எம். பி. திரு. தகநாயகா தெரிவித்ததாவது:

### இந்திய–சீனப்பிரச்னையிலும் முக்கியமானது

இரு சமூகங்களுக்கிடையே நிலவிவரும் தகராறுகளைத் தீர்க்க வட்டமேசை மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டுமென்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நிலவிவரும் தகராறு தீர்க்கப்படுவது, இந்திய சீன எல்லைத் தகராறு தீர்க்கப்படுவதிலும் பார்க்க அவசியமானது.

இந்நாடு எந்தவித முன்னேற்றமும் அடைய விரும்பினால் சிங்களவர் தமிழர் ஆகிய இரு சமூகங்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறுகளைத் தீர்த்துவைக்க அரசாங்கம் முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வகட்சிகளையும் கொண்ட ஒரு வட்டமேசை மகாநாடு கருத்து வேற்றுமைகளைப் போக்கி நல்லதொரு முடிவுகாண வாய்ப்பளிக்கும்.

இந்தவித கருத்தை தெரிவித்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ராஜதந்திரத்தை நான் பாராட்டுகின்றேன்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தவரான திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமி தெரிவித்ததாவது:—

சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராக இருப்பதால் கொள்கை விஷயத்தில் நான் எதுவும் கூறமுடியாது. ஆனால் தமிழரின் பிரச்னையை விரைவில் தீர்ப்பதால் நாட்டின் நலனுக்கு அது பெரிதும் உதவுவதாக இருக்கும். இந்த நாட்டிலுள்ள சகல சமூகங்களும் முன்னேற்றமடைய வேண்டினால் இது அவசியம்.

### கதாப்பிரசங்கம்

சண்டிலிப்பாய், திங்கள்

பழம் பெருமை வாய்ந்த சின்னத்தம்பிப் புலவர் அவர்களால் அந்தாதி பாடப்பட்ட சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை "கண்டியடிகள் நாயனார்" என்னும் சரிதம் கதாப்பிரசங்க ரூபமாய் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. வை. மகேசன் அவர்களால் இனிது நிகழ்ந்தேறியது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையும், பஜனையும் மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகின்றது.

# தமிழரசுக் கட்சிபற்றி திரு. செல்வநாயகம் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

**'தமிழரசுக் கட்சி இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. எனவே கட்சி எந்தக் கொள்கைகளுக்காகப் போராடி வருகிறதோ அவையெல்லாம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை'.**

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. வி. மேலும் தெரிவித்துள்ளதாவது:

"சமீப காலத்தில் தமிழரசுக் கட்சி அரசியல் விமர்சகர்களாலும் பத்திரிகைகளாலும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. இந்தக் கண்டனங்கள் பற்றி நாம் அதிக அக்கறை கொள்ளப்போவதில்லை. ஆனால் எமது நியாமான கோரிக்கைகள் உணரப்படவேண்டும்.

இவ்வித விமர்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையில் தமிழ் மக்கள் எவ்வளவு மனக்கசப்பு அடைந்துள்ளார்கள் என்பது பற்றி ஒன்றுமே அறியாதிருக்கிறார்கள்.

சிங்களம் மட்டும் சட்டமென்றால் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் சிங்களத்தில் தான் ஆட்சி நடத்தப்படும் என்பதையும் தமிழில் அல்ல என்பதையும் இந்த விமர்சகர்கள் புரிந்துகொள்ளாதிருக்கிறார்கள்.

வடமகாகாணத்தில் ... சதவீதமானோர் தமிழ்ப் பேசும் மக்கள். கிழக்கு மகாணத்தில் 85சதவீதமானோர் தமிழ்ப்பேசும் மக்கள். இந்த இரு பகுதிகளிலும் அரசகரும மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் சிங்களமே இருக்கும் என்பதையும் தமிழல்ல என்பதையும் இதன்படி தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் சுதந்திரம் இல்லை என்பதையும் இந்த விமர்சகர்கள் அறியமாட்டார்கள்.

இந்த விஷயம் 1957-ம் வருடத்தில் திரு. பண்டாரநாயக்காவுக்கும் அவரது மந்திரிகளுக்கும் எடுத்துக் காட்டப்பட்டபோது தனிச் சிங்களச் சட்டத்தால்தமிழ்ப்பேசும் மக்களுக்கு ஏற்பட்ட அநியாயத்தை அவர் அறிந்தார். இதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் தமிழில் இருக்கவேண்டுமென ஒப்புக்கொண்டார். இது தான் பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம்.

இப்பொழுது அரசாங்கம் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலும் சிங்களத்தில் தனது அலுவல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தமிழ் சமூகம் அழிந்துவிடும்

அரசாங்கத்தின் இந்த வித நடவடிக்கை தடை செய்யப்படாவிடில் தமிழ் சமூகத்தை அழித்தொழிக்கும் திட்டத்தில் அது வெற்றி கண்டுவிடும்.

தமிழரசுக்கட்சி ஒரு அரசியல் கட்சி மட்டுமல்ல. ஆனால் அது ஒரு விடுதலை இயக்கம். நமது இயக்கம் தனது குறிக்கோளை அடைய காந்தி மகாத்மா காட்டிய அஹிம்சை வழியான சத்தியாக்கிரகத்தையும் ஒத்துழையாமையையும் கடைப்பிடித்துள்ளது.

எம்மைக் கண்டனம் செய்பவர்கள் என்ன செய்யச் சொல்கிறார்கள் என்பது பற்றிப் புரியவில்லை. பார்லிமெண்ட் ரீதியில் நமது முயற்சி தோல்வி கண்டது. ஏனெனில் அங்கு வகுப்புவாதப் பெரும்பான்மையினர் இருக்கிறார்கள். எனவே தான் பார்லிமெண்டுக்கு வெளியில் நமது உரிமையைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

(மேற்கண்ட அறிக்கை எமக்கு நேற்றைய தினமே கிடைத்தது).

— —

தொண்டமனாறு, திங்கள்

தொண்டமனாறு சித்தி விநாயகர் ஆலயத்திருப்பணி வேலை ஊரவர்கள் பலரின் ஒத்துழைப்பால் செவ்வனே நடைபெற்று வருகிறது.

# 'கல்லூரி வளர்ச்சிக்கு பெற்றோரும் உதவவேண்டும்'

## பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் வித்தியாலய அதிபர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**"ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு பெற்றோர் பெரிதும் உதவவேண்டும். பழைய மாணவர்களும் கல்லூரியின் ஆக்க வேலைகளில் ஊக்கம் காட்ட வேண்டும். இவ்விதம் ஊக்கமும் உதவியும் தான் ஒரு கல்லூரியை முன்னேற்ற உறுதுணைபுரிவதாக இருக்கும்" என யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.**

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அதிபர் திரு. அம்பிகைபாகன் கல்லூரிப் பொன்விழா நடத்துவது பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில்கூறியதாவது:

### பொன்விழா ஏற்பாடு

எத்தனையோ பெரியவர்களின் முயற்சியால் வளர்க்கப்பட்ட கல்லூரி ஜூன் மாதத்தில் தனது பொன் விழாவை கொண்டாடவிருப்பது குறித்து நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். பெற்றோரும் பழைய மாணவரும் இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நல்ல ஆலோசனைகளையும்ஒத்துழைப்பையும் தரவேண்டும். அவ்விதம் போதிய ஒத்துழைப்புக் கிடைத்தால் தான் கல்லூரியின் பொன் விழா சிறப்பாக அமையும்.

பழைய மாணவர் சங்கக் காரியதரிசி திரு. என். இராஜநாயகம் சென்ற ஆண்டு அறிக்கையை வாசித்தபின்னர் பேசிய உப அதிபர் திரு.கா. வைரமுத்து கூறியதாவது:

எமது கல்லூரி மிகவும் கஷ்டமானதொரு சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்டது. எவ்வளவோ தியாகத்தில் மலர்ந்த இந்தக் கல்லூரியைப் பேணிக் காத்து வளர்ப்பது நமதெல்லோரது பொறுப்பாகும்.

1913-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரி இன்று வரை இயன்ற சேவை செய்து வந்துள்ளது. நமது முன்னோர்கள் தேடித்தந்த செல்வம் போன்ற இந்தக் கல்லூரியினால் எதிர்காலச் சந்ததியினரும் நன்மை பெறும்வகையில் நாம் அயராது உழைக்கவேண்டும்.

கூட்டத்தில் புதிய வருடத்திற்கான உத்தியோகஸ்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

தலைவர்: திரு. ச. அம்பிகைபாகன் உப-தலைவர்கள்:ஜனாப் எம். எம். அப்துல் காதர்,திரு. க. சதாசிவம், இணைக் காரியதரிசிகள்: திருவாளர்கள் எஸ். கந்தப்பிள்ளை, என். ராஜநாயகம், தனாதிகாரி: திரு. பி. கோபாலா. 29 பேரைக்கொண்ட அங்கத்தவர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

பாடசாலை

# 'சீராக இயக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதே'

யாழ்ப்பாணம், செவ்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போதிலும் அவற்றை இயக்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய எம்மீது இருக்கின்றது என்பதனை நாம் உணர்ந்து கருமமாற்ற வேண்டியது அவசியமாகும்.

வண்ணை நாவலர் வித்தியாசாலை ஆசிரியர்சங்க வருடாந்தக்கூட்டத்தில் செயலாளர் திரு. சி. சீவரத்தினம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இக்கூட்டத்துக்கு திரு. இ. திருநாவுக்கரசு தலைமை வகித்தார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வண்ணை நாவலர் பாடசாலை ஆரம்பமாகி 114 ஆண்டுகளைக் கடந்துவிட்டது. நாவலர் நோக்கங்கள் நிறைவேற ஆசிரியர்களாகிய நாம் முன்னின்று உழைக்க வேண்டும். இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றபோதிலும் ஸ்தாபகர் இலட்சியங்களுக்கமைவாக நடைபெற்றுவரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பாடசாலைக்குரிய தரும வருமானங்கள் நாவலர் தருமங்களுக்கே உபயோகமாகும்பொருட்டு அரசாங்கம் பொறுப்பேற்று அதனை நடாத்திவரும்பொருட்டு தர்மகர்த்தா சபையொன்று இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

நாவலர் நோக்கங்களுக்கமைவாக தமிழ் பண்டித வகுப்புகளும், சமஸ்கிருத ஆரம்ப–உயர்தர வகுப்புக்களும் சங்கீத வகுப்பும் நிகழ்ந்து வருகின்றன.

தனாதிகாரி அறிக்கையும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. தலைவர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு, காரியதரிசி திரு. சி. சீவரத்தினம், தனாதிகாரி திரு. சி. முத்துத்தம்பி, வாசிகசாலைப் பொறுப்பாளர் திரு. வ. கந்தசாமி, கணக்குப்பரிசோதகர் திருமதி ம. சண்முகரத்தினம்.

# "ஆனந்தன் இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டி"

## நீச்சல் வீரருக்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் வரவேற்பு

மாவிட்டபுரம், திங்கள்

"திட்டமிட்ட விடாமுயற்சி வெற்றியளிக்கும். எந்த ஒரு நாடும், தனி மனிதனும் முன்னேற திட்டம் வேண்டும். பயிற்சி வெற்றி தரும் என்பதை ஆனந்தனின் சாதனை எடுத்துக் காட்டுகிறது" என திரு. வ. பொன்னம்பலம் காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் நீச்சல்வீரர் ஆனந்தனுக்கு அளித்த வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் கூறினார். வைபவம் காங்கேசன் துறை கோட்டைமைதானத்தில் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினரால் நீச்சல்வீரர் ஆனந்தனின் சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

டாக்டர் சு. வே. சீனிவாசகம் பேசுகையில் வாலிபஆனந்தனின் சாதனை இந்நாட்டு வாலிபர்களுக்கு வழிகாட்டியதாக இருக்கின்றது. அவரைப் பின்பற்றி இந்நாட்டு வாலிபர்கள் சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று கூறினார்.

காங்கேசன்துறைக்கு கிப்சம் ஏற்றிவந்த கப்பலின் காப்டன் ரேர்ணர் பேசும்பொழுது திரு. ஆனந்தனின் சாதனையைப் பத்திரிகையில் பார்த்தபோது நான் ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டேன். இது ஒருஉலக சாதனையாக மதிக்கக்கூடியது. உலக மக்களின் சார்பில் பாராட்டைத் தெரிவிக்கிறேன் என்று கூறினார்.

பட்டினசபை உப-தலைவர் திரு. சு. கிருபாமூர்த்தி பேசுகையில் திரு. ஆனந்தன்மேலும் பல்சாதனைகளைச் செய்யவேண்டுமென்றும் இவர் வெளிநாடுகளில் தமது சாதனையை நிலைநாட்ட நாம் நம்மாலான உதவியை அளிப்போம் எனக் கூறி, ஒரு வெள்ளிக்கிண்ணத்தைப் பரிசளித்தார்.

திரு. டொமினிக்ஜீவா, திரு. வி. ஏ. கந்தசாமியும் மற்றும் பலரும் பேசினர்.

— —

# ஆலயமணி ஆரோகணம்

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலி, கந்தசுவாமி கோவில் ஆலயமணி ஆரோகணம் வருகிற 3-ம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுமென ஆலயமணித் திருப்பணிச்சபையார் அறிவித்துள்ளனர். ரூ. 12 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட கோபுர உச்சியில் இது ஆரோகணம் செய்யப்படும். ரூ 10 ஆயிரம் செலவில் இம்மணி இங்கிலந்திலிருந்து தருவிக்கப்பட்டது.

— —

# ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

னால் இங்கு தமிழர்களுக்குப் புதிய பலமும் புதுவாழ்வும் கிடைக்குமென்றார். இது நிறைவேறுவதற்கான சில நல்ல அறிகுறிகள் தோன்றிவருகிறதல்லவா?

கடித்தெனவந்த கரிதனையுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்,
பிடியனநடையாள் பெய்வளை மடந்தை பிறைநுதல் அவளொடும் உடனாய்,
கொடிதெனக் கதறுங் குரைகடல்சூழ்ந்து கொள்ள முன் நித்திலஞ் சுமந்து,
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங், கோணமாமலை யமர்ந்தாரே.

— திருஞானசம்பந்தர்.



# மாணவர் மலர்



# பறக்கும் பாம்பு

—மகான்—

(10)

"ஹலோ முருகு..." என்று கூறிக் கொண்டே வாசலில் நின்று கொண்டிருந்த அந்த ஆறடி உயர மனிதனை வரவேற்றார் சி. ஐ. டி ஷகான்,

திரு. முருகு, சி. ஐ. டி. ஷகானின் நெருங்கிய நண்பன். லட்சரூபாய் மோசடி சம்பந்தமாக சி. ஐ. டி. ஷகான் இந்தியாவுக்குச் சென்றிருந்த சமயம் சென்னையிலுள்ள ஒரு பிரபல ஹோட்டலில் முருகுவைச் சந்தித்தார். இலங்கையிலுள்ள திருக்கோணமலையைச் சேர்ந்த முருகு, ஏதோ வியாபாரம் சம்பந்தமாக சென்னையில் தங்கியிருந்தார். வியாபாரம் சம்பந்தமாக முருகு அடிக்கடி சென்னைக்குச் சென்று வந்ததால், சென்னையில் பல இடங்களையும் முருகு அறிந்துவைத்திருந்தார்.

சி. ஐ. டி, ஷகான் அப்போது சென்னைக்கு முதற் தடவையாகச் சென்றிருந்தார். அவர் மேற்கொண்ட விஷயம் மிகவும் அபாயம் நிறைந்தது. இடமும் புதிது. இவைகளைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால் இலங்கையைச் சேர்ந்த முருகு அப்போது சென்னையில் அதுவும் ஷகான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்ததால் சி. ஐ. டி. ஷகானுக்கும் முருகுவுக்கும் தொடர்பேற்பட்டது. உதவி செய்வதில் முதல் 'நம்பரான' முருகு ஷகானுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து கொடுத்தார். ஷகான் விரும்பிய இடங்களுக்கெல்லாம் கூட்டிச் சென்றார், இவ்வளவு தான் முருகு—ஷகான் தொடர்பு! இதன்பின்னர் முருகுவுக்கும் சி. ஐ டி. ஷகானுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது. அவர்களிருவரும் நெருக்கிய நண்பர்களாகிவிட்டார்கள்! எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு ஷகான் தாய்நாடு திரும்பும்போது முருகுவுக்கு ஒரு அன்பளிப்புச் செய்தார். ஷகானின் அன்புப் பரிசான அந்த விலையுயர்ந்த கைக்கடிகாரம் முருகுவின் மணிக்கட்டை இடம்பெற்றும் அலங்கரித்துக் கொண்டுதான் இருந்தது.

இரண்டு வருடங்கள் கழித்த பிறகு முருகுவை ஷகான் இப்பொழுது சந்திக்கின்றார் சென்னையிலுள்ள ஹோட்டலில் முருகுவை ஷகான் சந்தித்தும் தாயகம் செல்வதற்காக விடைபெறும் பொழுது, விமான நிலையத்தில் முருகுவுக்கு ஷகான் கைக்கடிகாரத்தை அன்பளிப்பு செய்தது எல்லாம் சி. ஐ. டி. ஷகானுக்கு நேற்று நடந்தாற் போல் இருந்தது. ஷகான் வாழ்க்கைச் சக்கரம் சுழன்றது. ஷகானுக்கு முன்னேற்றம், ஆனால் முருகுவுக்கு வாழ்க்கையே கசந்துவிட்டது! தலைவிதி எல்லோருக்கும் ஒன்றாக எப்போதும் அமையுமா?

முருகுவை ஷகான் மிகவும் அன்புடன் உபசரித்தார். களைப்படைந்த முருகு, நீராடிவிட்டு மதிய உணவை ஷகானுடன் சாப்பிட்டார். அன்று ஷகானின் வேலைக்காரன் விசேஷமாக உணவு தயாரித்து வைத்திருந்தான். இருவரும் மதிய உணவைப் புசித்துவிட்டு முன்ஹோலுக்குள் வந்தமர்ந்தனர். விசாலமான அந்த ஹோலுக்குள் ஒரு இடத்தைக் கவனித்தார் முருகு.

அவரின் முகம் மலர்ந்தது. அவர் உற்றுநோக்கிய இடத்தில்—அந்தச் சுவரில் சி. ஐ. டி. ஷகானுடன் முருகு சென்னையிலுள்ள ஸ்ரூடியோ ஒன்றில் பிடித்த நிழற்படம் மாட்டப்பட்டிருந்தது.

சிகரெட் புகையை சுருள் சுருளாக விட்டுக் கொண்டு ஷகானுடன் முருகு கதைத்துக் கொண்டிருந்தார். கடந்த கால வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களையும் அவர் ஷகானுக்கு கூறினர். சென்ற வாரம்தான் மட்டக்களப்புக்குத்தாம் வந்ததாகவும் மட்டக்களப்பில் தான் ஒரு வேலை செய்வதாகவும் தனது நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதென்றும் முருகு கூறினர். அவரின் மீது ஷகான் மிகவும் அனுதாபப்பட்டார்.

இடையில் 'பறக்கும்பாம்பு' விஷயமும் இவர்களது பேச்சில் இடம்பெற்றது.

"ஷகான்...நீங்கள் பறக்கும் பாம்பு விஷயத்தில் ஈடுபட்டிருப்பது எனக்கென்னவோ மிகவும் பயமாகவிருக்கிறது கொலை, கொள்ளை என்றால் உங்களின் திறமையைக் காட்டலாம். ஆனால் மிகவும் கொடிய விஷமுள்ள பறக்கும்பாம்பு விஷயம்...இதில் நீங்கள் தலையிடுவதை நான் விரும்பவில்லை ஷகான்..." என்று பணிவாகக் கூறினர் முருகு.

'ம்...' என்று அசட்டுப் புன்னகையை உதிர்த்துவிட்டு...

"முருகு, இது உமக்குப் புதிதாகவிருக்கலாம். ஆனால் இது எனக்குப் பெரிதல்ல. ஒருவிஷயத்தில் தலையிட்டுவிட்டேன் என்றால் பின்னர் வாபஸாகுவது என் கொள்கைக்கே—மனச்சாட்சிக்கே மாறானது" என்றார் ஷகான்.

"ஷகான் ......கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். சென்னையில் நான் உங்களுக்கு எந்தவிதமான கட்டங்களில் உதவி செய்தேன் என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. ஆனல் உங்கள் மீது எனக்கிருக்கும் அன்பின் நிமித்தமாகவே நான் இதைச் சொல்கின்றேன். பறக்கும் பாம்பு - பயங்கரமானது அந்த விஷயத்தில் ஈடுபடாதீர்கள்" என்று சிறிது காரமாகவே சொன்னர் முருகு.

"முருகு என்னை மன்னித்து விடு. நீ கூறுவதைப் பார்த்தால் பறக்கும்பாம்பு உன்னிடம்தான் இருப்பதுபோல் தெரிகிறது. உன்னை எனக்குத் தெரியாதா? இதில் தலையிடாதீர்கள் முருகு" என்று பணிந்து கேட்டார் ஷகான்.

"அப்படியானல் இதில் நீங்கள் நிச்சயம் ஈடுபடப்போகிறீர்கள்! ஏன் ஷகான்...உங்களை நோக்கி அபாயம் வரும் பொழுது அதைத் தடுப்பதற்கு எனக்கு உரிமையில்லையா? ஷகான், நான் மிகவும் பணிவுடன் உண்மையாகத்தான் கேட்கிறேன்......தயவு செய்து பறக்கும்பாம்பு மர்மத்தில் ஈடுபடாதீர்கள்" என்று கூறினர் முருகு.

"பறக்கும்பாம்பு மர்மத்தில் ஈடுபட்டுவிட்டேன் முருகு. எனது உயிர்போனாலும் இலட்சியத்தை கைவிடமாட்டேன். இந்தவிஷயத்தில் நீங்கள் குறுக்கிடாமல் இருந்தாலே போதும்" என்று சிறிது துணிந்தே கூறினர் ஷகான்.

முருகுவின் முகத்தில் தோல்விக் குறியொன்று மின்னல் போல் தோன்றி மறைந்தது. பலவிஷயங்களையும்பற்றி நல்ல மனதுடன்—வெளிப்படையாக கதைத்த முருகு, பறக்கும் பாம்பு விஷயத்தில் சி. ஐ. டி. ஷகானுடன் வாதாடிப் பேசியதை குறித்து ஷகானின் உள்ளம் முருகுவை எடைபோட்டுப்பார்த்தது.

"முருகு நல்லவன் உனக்கு ஒருநேரத்தில் உதவி செய்தவன்" என்று ஷகானின் மனச்சாட்சி கூறியது. ஆனல் நெஞ்சுக்குள் இருப்பதை யாரறிவார்கள்? சந்திரனுக்குப் போவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் விஞ்ஞானிகள் கூட மனிதனின் இதய ஒலியை, இதயத்துள் புதைந்து கிடக்கும் எண்ணற்ற உண்மைகளை, இரகசியங்களை இன்னும்தான் கண்டுபிடிக்கவில்லையே!

(தொடரும்)

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்வி, உங்களிற் பலருக்கும் பிடித்திருந்தது என்பதை நீங்கள் அனுப்பிய தபாலட்டைகள் காட்டிக்கொடுத்துவிட்டன. ஆனல், சரியான விடையெழுதியவர்கள்......? கடந்த வாரம் நான் கேட்ட கேள்வியின் சரியான விடை: "நான் தேநீர் பருகிக்கொண்டிருந்த சமயம் திடீரென மின்சார விளக்குகள் அணைந்துவிட்டன. ஹோட்டலில் ஏற்பட்ட குழப்பநிலைக்கு மின்சாரத் தடையே காரணம்."

பின்வருபவர்கள் சரியான விடையை எழுதியிருந்தார்கள். இவர்களுக்கும், 'மூளைக்கு வேலை' பகுதியில் தொடர்ந்து பங்குபற்றுபவர்களுக்கும் எனது பாராட்டுதல்கள்.

பொ. குமுதினி, நல்லூர் யாழ்ப்பாணம்; க. ரட்னேஸ்வரி, ந. ரஞ்சன, செ. லிங்காதேவி, கொககுவில் கிழக்கு; க. குணபாலசிங்கம் கொக்குவில்; எச். சரஸ்வதி, மணற்காடு; கி. வை. வாசன், கிறிஸ்தவ கல்லூரி, அச்சுவேலி; அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு; பி. ரி. தவராசா, கற்கைநகர்; அ. வேதநாயகி, காங்கேசன்துறை; பி. கண்ணபிரான், [illegible]லணை; வி. குகாதரன், [illegible] ரா, கருணைகரன், யாழ்ப்பாணம்; ஏ. சிவலிங்கம், நவாலி தெற்கு.

## இவ்வாரக் கேள்வி

"சில சிறுவர்கள் ஒரு மைதானத்தில் 'டெனிஸ்' பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஒருவன் அடித்த பந்து ஒரு மரத்தின் பொந்துக்குள் விழுந்துவிட்டது. நேராக ஆனல் சிறிது ஆழமாகவிருக்கும் அந்த மரப்பொந்துக்குள் விழுந்த பந்தை எடுக்க எல்லோரும் முயற்சித்தனர். கையை உள்ளே செலுத்திப் பார்த்தனர். ம்...... முடியவேயில்லை. 'விளையாட்டு முடிந்துவிட்டது' என நினைத்துக்கொண்டு, பந்தையும் எடுக்காமல் எல்லோரும் சென்றுவிட்டனர். ஆனல் புத்திசாலியுள்ள ஒரு பையன் அந்தப் பந்தை எப்படியோ எடுத்துவிட்டான். மரப்பொந்துக்குள் விழுந்த 'டெனிஸ்' பந்தை அந்தப் பையன் எப்படி வெளியே எடுத்தான்"?

என்ன கேள்வி இலேசாகவிருக்கிறதோ? இரண்டு வாரமாக உங்களுக்கு கஷ்டமான கேள்வி கொடுத்துவிட்டேன் அல்லவா. அதுதான் இப்போது சுலபமான கேள்வி கேட்டிருக்கின்றேன். விடையை தபாலட்டையில் எதிர்வரும் சனிக்கிழமைக்குப் பிந்தாமல் மாணவர் மலர், ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள், சரி மீண்டும் அடுத்த வாரம் உங்களைச் சந்திக்கின்றேன்.

—சாந்தா.

# விஞ்ஞானமும் வாழ்க்கையும்

—ச. பேரானந்தன், வண்ணார்பண்ணை—

19-ம் நூற்றாண்டு இறுதியிலேயே விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டதெனலாம். ஆதி மனிதன் தொடக்கத்தில், பல மைல்களைக் கடப்பதற்கு காட்டு வழியாகவும், கரடுமுரடான பாதை வழியாகவும் செல்வதோடு, துஷ்ட மிருகங்களுக்குப் பயந்து மன அமைதியின்றி செல்ல வேண்டியதாயிற்று. ஆனல் இன்று விஞ்ஞான வளர்ச்சியினல் குறிப்பிட்ட இடத்தை, காலதாமதமின்றி அடைந்துவிடலாம்.

மனிதன் தனது ஆராய்ச்சியின் பயனாக அறிவைப் பயன்படுத்திய நிலைபல இயற்கைச் சக்திகளை மாற்றியமைத்தான். எமக்குத் தேவையான குளிர்ச்சி பொருந்திய காற்றை மின்சார விசிறிகள் மூலம் அளித்தான். மனிதன் பல நாட்களாகத் தொடர்ந்து செய்யும் வேலையை இயந்திரம் இன்று ஒரு கணப் பொழுதில் செய்து முடிக்கின்றது.

ரைட்சகோதரர்களின் கண்டுபிடிப்பான ஆகாய விமானத்தால் மனிதன் தனது பிரயாணத்தை விரைவாகச் செய்து முடிக்க உதவுகின்றது.

மார்க்கோனியின் கண்டுபிடிப்பால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள ஒருவரோடு கிட்ட இருந்து பேசுவதுபோல் சம்பாஷிக்கமுடிகிறது. இவற்றைவிட மனிதன் தமது ஓய்வு நேரங்களை இன்பமாகவும், உல்லாசமாகவும் களிப்பதற்கு எடிசனின் சினிமா படக்காட்சியும், மார்க்கோனியின் ரேடியோவும், பயாட்டின் டெலிவிஷனும் எமக்குப் பயன் படுகின்றன. இவற்றால் உலக அதிசயங்களையும், செய்திகளையும் உடனுக்குடன் மக்கள் அறிய முடிகின்றது. இவையும் விஞ்ஞான சாதனையென்றே கூறலாம்.

இந்நூற்றாண்டிலே இயற்கையை செயற்கையாக எடுத்துக்காட்டும் அளவிற்கு நுட்ப அறிவு பெற்ற விஞ்ஞானிகள் தற்போது செயற்கைச் சந்திரனையும் செய்து உலகைச் சுற்றிவரச் செய்திருக்கின்றனர் இதில் பொறிக்கப்பட்டுள்ள கருவி மூலம் உலகைச் சுற்றிப் புகைப்படங்கள் எடுத்துவரவும் செய்துள்ளனர். இதிலிருந்து விஞ்ஞானிகளின் வியக்கத்தக்க செயல்களையும், விஞ்ஞானம் இன்று அடைந்துள்ள முன்னேற்றத்தையும் ஒருவாறு அறியமுடிகின்றது. விஞ்ஞானத்தில் ஒரு சில தீமைகள் ஏற்பட்டாலும் எமது வாழ்க்கைக்கு அதிக நன்மையை அது கொடுக்கின்றது.

# குறள் காட்டும் நெறி

-ஈழத்து சிவானந்தன்-

பிறர் உண்பதையும், உடுப்பதையும் கண்டு பெருமைப்படுபவர்கள்; எப்படி வாழ்ந்தார்கள் என்பதையும், பிறரது உயர்வையும், உன்னதத்தையும் கண்டு உவகையுடன் அவர்களைப் பாராட்டும் பண்பினர் எத்தகைய வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதனையும் வள்ளுவர் அறிய ஆசைப்பட்டார். புகைச்சலும், பொருமையும், எரிச்சலும் கொண்டவர்கள் வாழுமிடத்தில் சுமார் ஐந்து மாதங்களும், தெறிந்த நெஞ்சமும் தேறிய மனப்பான்மையும் நிறைந்தவர்கள் வாழுமிடத்தில் ஐந்து மாதங்களுமாக வள்ளுவர் வாழ்ந்து; அவர்களது இயல்புகளைக் குறித்து வைத்துக்கொண்டார்.

வள்ளுவரது குறிப்பு அவருக்கே அங்கலாய்ப்பைக் கொடுத்தது. பொருமை நிரம்பியவர்கள் செல்வததோடும்; செல்வாக்கோடும் செழித்திருக்க இங்கித இதயம் கொண்டோர் கொடுமைகள் பலவற்றிற்கு இலக்காகி இன்னல் உற்றனர். நல்லவரின நலிவும் நஞ்சர்களது நலனும் வள்ளுவர் உள்ளத்தை வாட்டி வதைத்தன. பொருமையும் புகைச்சலும் பூரிப்புக்கொள்ள புன்முறுவலும் புனிதமும் புழுங்க என்ன தான் காரணமென்பது வள்ளுவருக்குப் புலப்படவில்லை.

வாழ்க்கைக் கடலில் மிதந்து பலதரப்பட்ட அலைகளால் எற்றுண்டு தாக்கப்பட்ட அனுபவப் பெரியார்களை அணுகி, தனது குழப்பத்திற்கு தெளிவு கேட்டார் அவர். அனுபவஸ்தர்களும், கற்றறிந்த மேதைகளும் கையை விரித்து தமக்குப்புலப்படவில்லையெனப் புகன்றனர். புலவர்களுக்கும் புலப்படாதபுதிரை அறிஞர் உலகத்தனைக்கும் காட்டி ஆராய்ச்சி செய்விக்க அவாவினர் வள்ளுவனர். தமது குறள் தொகுப்பின் பிற்பகுதியில் 'அழுக்காறுமை' என்ற அதிகாரத்தில் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விடயத்தை எழுதலானர்.

"அவ்விய நெஞ்சத்தான்
ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்."

# பொது மேடை

கந்தையா நீலகண்டன், ஜி. ஸி. ஈ. (ஈ) வகுப்பு, உடுப்பிட்டி: "மாணவர் மலரில் இப்பொழுது நல்ல விஷயங்கள் வெளியாகின்றன. பறக்கும் பாம்பு கதை, விறுவிறுப்பும் சுவைகொண்டதாகவும் இருக்கிறது."

பி. ரி. தவராசா, கற்கைநகர்: "பறக்கும் பாம்பு தொடர் நவீனத்தை தொடர்ந்து படிக்கின்றேன். துப்பறிவதில் எனக்கும் ஆசை ஏற்படுகிறது."

சி, மகாலிங்கம், ஆறும் கட்டையடி, சுன்னகம்: "பறக்கும் பாம்பு தொடர் கதை முடிந்ததும், அதைப் புத்தகமாக வெளியிட்டால், என்போன்ற பல மாணவர்களுக்கு உபயோகமாகவிருக்கும் கதை எழுதும் ஆசிரியருக்கு எனது பாராட்டுதல்கள்."

ச. பூலோகநாதன், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்; "மூளைக்குவேலை பகுதி வெகு ஜோர். மூளைக்கு நல்ல வேலை கொடுக்கிறது."

க. சிதம்பரநாதன், மாதகல்: "நடமாடும் ஞானி இப்பகுதிக்கு மிகவும் அவசியமானவர். அவரை அடிக்கடி சந்திக்க விரும்புகின்றேன்."

இப்பகுதிக்கு எழுதுபவர்கள் தங்களது முழு விலாசத்தையும் தெரிவிக்கவேண்டும். முழு விலாசமில்லாதவைகள் இப்பகுதியில் இடம்பெற மாட்டா.

# உருத்திரபுரத்தில் சர்வோதய சிரமதான முகாம்

## ஸ்ரீ அரியநாயகம் கலந்து கொள்வார்

கிளிநொச்சி, திங்கள்

வட இலங்கையில் முதன் முதல் சர்வோதய சிரமதான முகாம் வருகிற ஏப்ரல் 19, 20, 21-ம் திகதிகளில் உருத்திரபுரத்தில் நடைபெற உள்ளது. உருத்திரபுரம் அரசினர் மகாவித்தியாலயத்துக்குச் செல்லும் பிரதான பாதை அமைக்கும் முகமாகவே குறித்த சிரமதான முகாம் நடத்தப்படுகின்றது. இச்சிரமதான முகாமுக்கான ஏற்பாடுகளை கவனிக்கும் கூட்டம் ஒன்று சமீபத்தில் உருத்திரபுரம் அரசினர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது கூட்டத்துக்கு கரைச்சி-துணுக்காய் பிரிவு காரியாதிகாரி திரு. அ. க. விஸ்வநாதன் தலைமை வகித்தார். கிராம அபிவிருத்தி இயக்கத்தை சேர்ந்தவர்களும் சமூக சேவா இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் இக் கூட்டத்தில் பங்கு பற்றினார்கள்.

பாதை அமைப்பது சம்பந்தமான மதிப்பீடுகளையும் ஆலோசனைகளையும் நீர்ப்பாய்ச்சல் பகுதியினரிடம் இருந்து பெறுவதென்று தீர்மானிக்கப் பட்டது.

பெட்டியுள்ள "டிருக்ரர்" சொந்தக்காரர்களும் "லொறி" சொந்தக்காரர்களும் தங்கள் வாகனங்களின் ஒத்துழைப்பைத் தந்து உதவுமாறு கோரப்பட்டார்கள். கிரவல் கல்லு முதலியவற்றையும் மண்வெட்டி, கூடை முதலிய உபகரணங்களையும் அன்பர்கள் தந்து உதவ வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

மகா வித்தியாலய அதிபர் திரு. ஈ வி. ஜே. கென்ஸ்மன், குடியேற்ற அதிகாரி திரு. விக்னேஸ்வரன் நில அபிவிருத்தி அதிகாரி திரு சிவதர்சன் ஆகியோர் உருத்திரபுரம், சிவநகர் கிராமமுன்னேற்ற சங்கத்தாரின் உதவியுடன் சிரமதான வேலைக்காக வரும் தொண்டர்களின் உணவு, படுக்கை முதலிய சகல வசதிகளையும் கவனித்துக் கொள்ள ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

இந்த சர்வோதய சிரமதான முகாம் வேலைகளுக்கான செலவுகளுக்கான நிதி, அரிசி, ஏனைய உணவுப் பண்டங்களை விரும்பும் அன்பர்கள் அனுப்பி உதவலாம் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த சிரமதான முகாமுக்கு தென்னிலங்கையில் இருந்து சுமார் 25 ஊழியர்களும் வட இலங்கையிலிருந்து சுமார் 25 ஊழியர்களும் சமூகமளிப்பார்கள். இந்த 50 பேரும் 3 நாட்களும் ஒரே இடத்தில் தங்குவார்கள். இதற்கான நேர சூசி தயாரிக்கப்படுகின்றது. இந்த பயிற்சி முகாமில் பங்கு பற்றுவோர் கௌரவ நிர்வாகி, காந்திநிலையம், உருத்திரபுரம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

சர்வோதய சிரமதான பயிற்சி முகாம் நடைபெறும். 3 நாட்களிலும் வகுப்புக்கள் கருத்தரங்குகள் நடைபெறும் கடைசி நாளில் பகிரங்க கூட்டம் நடைபெறும். அகில இந்திய ஆதாரக்கல்வி சங்கத்தலைவராகிய திரு. ஈ. டபிள்யு. அரியநாயகமும் இந்தசிரமதான முகாமில் கலந்து வகுப்புக்களில் பங்கு பற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. திருமதி ஆஷாதேவி அரியநாயகம் வங்காளத்தில் ஆசார்யவினோபாஜீயுடன் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருப்பதால் அவர் சமூகமளிக்கமாட்டார் எனவும் தெரிகின்றது.

சர்வோதய சிரமதான முகாமுக்கு உருத்திரபுரம் பகுதி மக்களின் அன்பையும் ஆதரவையும் திரட்டும் நோக்கமாக பிரசாரக்கூட்டம் ஒன்று 4-4-63 மாலை ஐந்து மணிக்கு உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும், இக் கூட்டத்தில் முதலியார் செ. சின்னத்தம்பி, சுவாமி தம்பிராசா, சுவாமி இம்மானுவல், த. நல்லதம்பி, வித்தியாலய அதிபர் திரு. கென்ஸ்மன் ஆகியோர் பேசுவார்கள் எனவும் தெரிகின்றது.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 2-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இராமநவமி — இசைச்சித்திரம், 9-45 என். ஆர். கோவிந்தசாமி — நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 டி. எஸ். பகவதி — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க — மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

மாலை 4-45 விவிதபாரதி( கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வி. முனுசாமி — பேச்சு, 7-45 மாயூரம் வி. ஆர். கோவிந்தராஜபிள்ளை, திருவானப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை — வயலின், 9-15 மெல்லிசை, 9-30 'புன்னகைக்கு அப்பாய்' — கவிதை நாடகம், 9-45 ஒலி ஏடு — இலக்கியசஞ்சிகை.

---

## தமிழ் நூலுக்கு அகாடமி பரிசு

புதுடில்லி, ஏப். 1

8 நூலாசிரியர்களுக்கு 1962-ம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி பரிசுகளை பிரதமர் நேரு வழங்கினர். அகாடமியின் தலைவரான ஸ்ரீ நேரு அப்போது பேசுகையில் சுதந்திரத்திற்குப் பின் பாரத மொழிகள் வளர்ச்சி பெற்றிருப்பதாயும், நாட்டு மொழிகளுடனும், வெளிநாட்டு மொழிகளுடனும் தொடர்பு செய்வதன் மூலமே மொழி வளர்ச்சி ஏற்படுமென்றும் கூறினர். எந்த மொழியும் இன்று தனித்தியங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ மீ. ப. சோமசுந்தரம் எழுதிய "அக்கரைச் சீமையில்" என்ற தமிழ் நூல் (பிரயாண வர்ணனை) பரிசு பெற்ற நூல்களில் ஒன்று.

## அலங்கார உற்சவம்

தெல்லிப்பளை, திங்கள்

தெல்லிப்பளை பன்னாலை வரத்தலம் என்னும் புராதன ஸ்தலத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு வருகிற(4-4-63) வியாழக்கிழமை தொடக்கம் பதினொரு நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடத்தப்படும்.

## அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

கலஹா, திங்கள்

கலஹா தெல்தோட்டம் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வருகிற 3-4-63 காலை 9-14 மணி முதல் ஸ்ரீ முத்துமாரியம்பாளுக்கும், விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகங்களுக்கும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை யாழ்ப்பாணம், வண்ணைநகர் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ ச. இராமசாமிக் குருக்கள் நடத்திவைப்பார்.

## நுவரேலியாவில் விவசாயகாட்சி

நுவரேலியா, திங்கள்

நுவரேலியாவில் விவசாய, தாவரக் கண்காட்சி இவ்வாண்டும் வழக்கம் போல் நடைபெறும். கவர்ணர்ஜெனரல் ஆதரவில் நடைபெறும் இக் காட்சியில் பிரதமர் போஷகராகவும், கைத்தொழில் மந்திரி, விவசாய மந்திரி, உணவு மந்திரி, நுவரேலியா மேயர் ஆகியோர் உதவி போஷகர்களாகவும் இருப்பர்.





ஸலைக் கண்டதுமே முகங்கள் மலருகின்றன

குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸலை ஆவலோடு எதிர்நோக்குகிறார்கள். ஸலுக்குள்ள பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.

ஸலைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதாரண மோல்டட் பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

ஸல்—குடும்பத்தார் உடன் விரும்புவது

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது

# "நாடகங்களினுல் நாட்டுக்கு புத்திகூற முடியும்"

## நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா கருத்து

மாவிட்டபுரம், திங்கள்

"நாடகம் மிகவும் ஓர் அதிசயசக்திவாய்ந்தது. முத்தமிழ்க் கலைகளில் நாடகமே சிறந்தது என முன்னேர்கள் கூறியுள்ளனர். இயலும், இசையும் புதிய உணர்ச்சியையும் இன்பத்தையும்தருவதாயிருப்பினும் நாடகம் அறிவையும் ஆக்கத்தையும் தரும்" என்று நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா நேற்றுமாலை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"தற்கால நாகரிகத்தின்படி நாடகத்திலும் படக் காட்சிகளிலும் பின்தங்கிய தேசங்களுக்கு நல்ல புத்திமதிகளை எடுத்துக் காட்டமுடியும் நாடகத்தின் மூலம் நாட்டுக்குத் தேவையான திட்டங்கள் செயல்களைவெளிப்படுத்தலாம். ஜாதிவேற்றுமையாயினும் சரி சமூக வேற்றுமையாயினும் சரி நாடகம் அவற்றை அகற்றி நாட்டில் சமூக ஒற்றுமையையும் தேசிய மனப்பான்மையையும் வளர்க்கக் கூடியவையாகும்.

திரு. எஸ். ராஜரத்தினம் நன்றி கூறினர். கொழும்பு ராஜ் நகைச்சுவை நாடகமன்றத்தின் 'அவமானம்' என்னும் நாடகமும் நடைபெற்றது.

—

## சைக்கிளில் இலங்கையை சுற்றினர்

மன்னர், திங்கள்

பருத்தித்துறை அத்தியடி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. கே. ரி. இராசசிங்கம் என்பவர், சைக்கிளில் இலங்கைச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு, ஏழு நாட்களின் பின் கடைசி நாளன்று மன்னர் மாவட்டப் பிரிவிலுள்ள முருங்கன் பகுதிக்கு வந்து சேர்ந்தார். திரு. எம். முத்து அவர்களுடன் உரையாடிய பின் பூநகரிப் பாதையால், தன் இல்லத்துக்கு சென்றடைந்தார்.

# சமூகசேவையில் மாணவர்கள் அதிக அக்கறை

## கல்லூரி அதிபர் பெருமிதம்

காரைநகர், திங்கள்

'எமது கல்லூரி மாணவர்கள் கல்விகற்பதோடு சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறர்கள் என்பதற்கு பலசான்றுகள் உண்டு. இது குறித்து நாம் பெருமையடைகிறேம்.

இவ்வாறு காரைநகர் இந்துக் கல்லூரி பரிசளிப்பு, விழாவில் கல்லூரி அதிபர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

அதிபர் மேலும் தமது அறிக்கையில் தெரிவித்ததாவது:

இலங்கையிலுள்ள பழைய கல்லூரிகளில் எமது கல்லூரியும் ஒன்று. கல்லூரி தனது சமயாசார முறைகளை இதுவரை பேணிக்காத்து வந்துள்ளது.

### ஒழுக்கம் அவசியம்

கல்வி நிலையங்களில் ஒழுக்கத்தைப் பேணுவது மிகவும் அவசியமானதொன்று சமூக நலன் கருதுபவர்களாலும் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள பெரியவர்களாலும் இது பலதடவைகளில் சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளது.

எல்லோருடைய ஒத்துழைப்புடன்தான் இந்தப் பிரச்சினையை நாம் நன்கு அணுகலாம்.

## கோணேஸ்வரத்தில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையாக இருக்க வேண்டுமென ஆலய நிர்வாகிகள் வேண்டுகின்றனர். வெளியூர் யாத்ரீகர்கள் தங்குவதற்கென இந்துக் கல்லூரி, சண்முக வித்தியாலயம் ஆகிய இரு கலாசாலைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

திருக்கோணமலையிலுள்ள சமய ஸ்தபானங்கள், மன்றங்கள், சமாஜங்கள், பாடசாலைகள் முதலியன கோவிலைச் சுற்றியுள்ள மடங்களைத் துப்பரவு செய்வதில் ஈடுபட்டுள்ளன. இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சகல மதத்தைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கோவிலைச் சுற்றியுள்ள இடங்களுக்கு மண்பரவும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். கப்டன் திரு. இராமநாதன் தலைமையில் இருபத்தைந்து இராணுவ வீரர்கள் கோவிலைச் சுற்றி உள்ள பிரதேசங்களைச் சுத்திகரிப்புச் செய்வதிலும், அங்குள்ள பாரங்களை அகற்றியும் பல வேலைகளைச் செய்தனர். இங்குள்ள இராணுவவீரர்களும் இவர்களுடன் கலந்து கொண்டு பங்குபற்றினர். மற்றும் பலரும் தோரணங்கள், கொடிகள் கட்டும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### கும்பாபிஷேக சொற்பொழிவுகள்

திருக்கோணநாயகராலய பெருஞ் சாந்திக் குடமுழுக்கு வைபவத்தையொட்டி 3-4-63 வரை நடைபெறும் வாலஸ்தாபன கும்பாபிஷேக நிகழ்ச்சிகளின் போது இன்னிசை, அருளுரைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சைவப்புலவர் நா. பொன்னையா, புலவர் வை. சோமஸ்கந்தர், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா, ஆசிரியர் பண்டிதர் சி. வயிரமுத்து, பண்டிதர் செ. துரைசிங்கம், செல்வி எஸ். சின்னையா, கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரம், சிவானந்த சச்சிதானந்த மாதாஜி, பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், பண்டிதர் ஐ. சரவணமுத்து, சைவப்புலவர் ந கா. அருணசல தேசிகமணி, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், சேர். கந்தையா வைத்தியநாதன், பண்டிதர் வி. சி. கந்தையா ஆகியோரும் இந்த நாட்களில் சொற்பொழிவு ஆற்ற இருக்கின்றனர். முத்தமிழ்மணி ஸ்ரீ வி. எஸ. எஸ். மணிபாகவதர், சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேலு ஆகியோரும் கதாகாலேட்சபம்செய்வர்.

—

## கிராம சேவையாளர் நியமன இடங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாவட்ட கிராம சேவையாளராக தெரிவு செய்யப்பட்டவர்கள் புதிதாக நியமனம் பெற்று கடமையாற்ற வேண்டிய இடங்கள் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்கள் அடுத்தமாதம் தமது கடமையை ஆரம்பிப்பர்.

### யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு

சிவியாதெரு-அரியாலை: எஸ். குமாரசாமி, சோனக தெரு: எம். சிவலிங்கம், கொக்குவில்: எஸ். ஆறுமுகம், வண்ணர் பண்ணை-தெ. கிழக்கு: ஏ. அலெக்சஸ், குருநகர்: டோமினிக், கொழும்புத்துறை, எம். ஐயாதுரை, வண்ணர்பண்ணை—வ. மேற்கு: கே. கந்தவனம், திருநெல்வேலி: டி. சிவபாதசுந்தரம்.

### வலிகாமம்-வடக்கு காரியாதிகாரி பிரிவு

கட்டுவன்: வி. நடராசா, அளவெட்டி: எஸ். சச்சிதானந்தம், இணுவில்: கே. வேலும்மயிலும், உடுவில்: கே. நல்லையா, மாவிட்டபுரம்: என். நடராசா, மல்லாகம்: எஸ். கனகசபை, மயிலிட்டி-கரை: ஏ. எஸ். பதமநாதன் மயிலிட்டி-வடக்கு: எம். பாலசுந்தரம், பலாலி: என். கதிரேசன், ஏழாலை: ஆர். பரராசசிங்கம், சுனலுகம்: எஸ். துரைசிங்கம், தெல்லிப்பழை-கிழக்கு: எஸ். நடராசா, கீரிமலை: பி. சொக்கலிங்கம், காங்கேசன் துறை: ஜே. அருளானந்தம், வசாவிளான: மகாராசா.

—

## திருக்கோணமலையில் சிவலிங்கம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலையிலுள்ள கோணேசர் ஆலயத்துக்கு அருகாமையில் சிவலிங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1 1/2 அடி உயரமுள்ள இந்த லிங்கத்தை இப்பொழுது பல மக்கள் சென்று வழிபட்டு வருகிறர்கள்.

## பத்திரிகை . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

வீதியிலுள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்தில் மார்ச் 12-ம் திகதி நடைபெற்றதெனவும் தெரியவந்துள்ளது.

இதைத்தவிர அரசாங்க உத்தியோகஸ்தர்களைக்கொண்ட வேறு மகாநாடுகளோ கூட்டங்களோ சமீபத்தில் கொழும்பில் நடைபெறவில்லை.

நான் இப்பொழுது சிவில் சேவையாளர் சங்கத்தில் அங்கத்தவனுய் இல்லாதிருந்தாலும் நான் இந்தச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தேன்.

நான் அப்பொழுது நிகழ்த்திய உரை பௌத்த சமயத்தவர்களின் வாழ்க்கைக்கு மட்டுமே சார்ந்ததாக இருக்கவில்லை. நான் எனது உரையில் தேசிய நன்மையைப் புறக்கணிக்கும் பத்திரிகைகளால் விளையும் கேடுகள் பற்றியும் முக்கியமாகக் குறிப்பிட்டேன்.

எமது சமாஜத்துக்கும் அரசியலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் நமது சமாஜம் சார்ந்து இயங்கவுமில்லை."

—

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரர் கோவில்14-ம்திருவிழாவில் திரு வி. கே. ஆறுமுகம் 'காலனை வென்ற பாலன்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

—

## நாளாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவில் கொடியேறி நாளாந்த உற்சவம் டைபெற்று வருகிறது.

## முட்டையின் விலை இறக்கம்

மன்னர், திங்கள்

மன்னர்,மாவட்டத்திலஉள்ள முருங்கன் பகுதியில், கோழிப் பண்ணைகள் அதிகரித்து இருப்பதால் முட்டைகள் மலிவான விலைக்கு விற்பனையாக இருக்கிறது. முன்பு 25 சதத்துககு எடுத்த முட்டை ஒன்று 15 சதத்துக்கும் எடுப்பதற்கு ஆள் இன்றி மந்தநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

—

லண்டன்

## பல்கலைக் கழக கடைசிப் பரீட்சை

கொழும்பு, திங்கள்

லண்டன் பல்கலைக் கழகப் பரீட்சைகள் இலங்கையில் 1965-ம ஆண்டு கடைசித் தடவையாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


**புத்தாண்டின் புனித விருந்து!**

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்!
பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்டபயங்கரசோதனை!
ஆசையும் நேசமும் பாசமும்
சந்தேகத்திற்கு பலியாகும் பரிதாபம்.

அத்தனையும் புதிய படைப்பு!

சிவாஜி கணேசன் — எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி — ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
மற்றும் பலர் நடிக்கும்
— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

**ஆலய மணி**

டைரக்ஷன் கே. சங்கர் — இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

**4-வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)
மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்
சாவித்திரி
குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி
டி. கே. ஷண்முகம்
மற்றும் பலர் நடிக்கும்

2.4.63



பத்மினி பிக்சர்ஸ்

**கப்பலோட்டிய தமிழன்**

மனோகரா
(யாழ்ப்பாணம்)
காமினி பொன்சேகா — ஜீவ ராணி
நடித்த
றன் මුතු දූව



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
ஒடியன் (சல்கிசை)
2-15, 6, 9-30 மணி
ஒடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி

ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த



**ஆடிப் பெருக்கு**

டைரக்ஷன்: கே சங்கர்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.